ஸ்ரீ:

ப்ராசீநசார ஸங்க்ரஹம்

(உத்தர பாகம்)

ந்யாய வேத வேதாந்த வித்யாநிதி,
ராமாநுஜ ஸித்தாந்தபாஸ்கர, மஹாவித்வான்
நாவல்பாக்கம் சதுர்வேத சதக்ரது
ஸ்ரீ அய்யா தேவநாதா சார்ய ஸ்வாமி
ஸாதித்தது

ப்ரசுரகர்த்தர் :
ஸதாசாரப்ரசாரஸமிதி
3/2 தெற்கு மாடவீதி ; திருவல்லிக்கேணி, சென்னை–5.

1972 [விலை : 1–50

ஸ்ரீ:

நிவேதநம்

ஜ்ஞாதிகளுடையவும் பந்துக்களுடையவும் க்ருஹங்களில் ஜனன மரணங்கள் ஏற்படும்போது நமக்குப் பல விதமான ஸந்தேஹங்கள் உண்டாகின்றன. இந்த ஸந்தேஹங்களைப் பரிஹரிக்கக் கூடிய பெரியோர்கள் நாம் இருக்கும் இடங்களில் கிடைப்பது அரிது. ஆகையால் ஸந்தேஹங்களைத் தீர்த்து விஷயங்களை விளங்கவைக்கக் கூடிய சிறு க்ரந்தமொன்று வெளியிடப்பட்டால் எல்லோருக்கும் மிகவும் உபகாரமாயிருக்குமென்று தோன்றிற்று. அதனால் மஹாவித்வானும் சிஷ்டாக்ரேஸரரும் சமதமாதி ஸகல கல்யாண குண நிதியுமான நாவல்பாக்கம் ஸ்ரீ உ. வே. அய்யா தேவநாதாசார்ய ஸ்வாமி ஸன்னிதியில் ப்ரார்த்தித்தோம். பரம க்ருபையோடு உடனே அங்கீகரித்தருளினார். அந்த ஸ்வாமிக்கு அஞ்ஜலியுடன் நம் க்ருதஜ்ஞதையை ஸவிநயம் தெரிவித்துக் கொள்கிறோம்.

தினந்தோறும் அநுஷ்டிக்கப்படவேண்டிய ஆசாரங்களைப் பற்றியும் ஒரு க்ரந்தம் வெளியிடவேண்டுமென்ற எண்ணமிருக்கிறது. இதை ஸாதிப்பதாகவும் ஸ்வாமி திருவுள்ளம் பற்றியாயிருக்கிறது. இந்த க்ரந்தத்தைப் பூர்வபாகமாக வைத்து ப்ரக்ருத க்ரந்தம் உத்தரபாகமாக வெளியிடப்படுகிறது. இந்த க்ரந்தத்தின் கைப்பிரதியைப் பரமகிருபையுடன் ஒப்பு நோக்கி அச்சுக்கு ஏற்றதாகச் செய்தருளிய ஸ்ரீ உ. வே. மீமாம்ஸார்ணவ, பண்டிதராஜ, தேசிகதர்சன துரந்தர D. T. தாதாசாரியர் ஸ்வாமிக்கும் நம் க்ருதக்ஞதையை ஸவிநயம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த க்ரந்தத்தைப் ப்ரசுரத்திற்கு ஏற்றவாறு நல்ல முறையில் படி செய்து கொடுத்த ஸ்ரீ உ. வே. நாவல் பாக்கம் வே. ராமாநுஜாச்சாரியாருக்கும், இதை அச்சிடுவ தற்கும் பிழை திருத்துவதற்கும் பல வகைகளில் உதவிய ஸ்ரீ உ. வே. ஒரத்தி வித்வான் சிரோமணி V. G. ரங்கா சாரியர் ஸ்வாமிக்கும், கொத்திமங்கலம் வித்வான் சிரோ மணி ரகு. கோபாலசக்ரவர்த்திக்கும் ஸமிதி தன் க்ருதஜ்ஞ தையைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஆஸ்திக ஜனங்கள் இந்த க்ரந்தத்தை வாங்கி உபயோகப்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

ஸதாசாரப்ரசாரஸமிதி

பொருளடக்கம்

1
2
3
4
5
6
7
8
9
10
11
12
14

ஶ்ரீ:

ப்ராசீநாசார ஸங்க்ரஹம்

(உத்தர பாகம்)

1. ஆசௌச லக்ஷணம்

'ஆசௌச' மென்பது தீட்டு. அதாவது பிறப்பினாலோ, இறப்பினாலோ ஏற்படும் அசுத்தி. பிறப்புத் தீட்டை ஜாதாசௌசம் என்றும், இறப்புத் தீட்டை சாவாசௌசம் என்றும் சொல்லுவார்கள். இது காலத்தாலும் ஸ்நானத்தாலும் போகக் கூடியது.

2. ஆசௌசத்தில் செய்யக் கூடியவையும் செய்யக் கூடாதவையும்

ஆசௌசத்தில் ஸந்தியோபாஸனம், அக்நிஹோத்ரம், ப்ரேதகார்யம், பிண்டோதக தானாதிகள் ஆகியவைகளை மட்டும் ஸ்நானம் பண்ணி ஈரவஸ்திரத்தோடு பண்ணவேணும். ஔபாஸனத்தை அசலாரைக் கொண்டு பண்ணி வைக்கலாம். இவை தவிர தானமோ, ப்ரதிக்ரஹமோ, வேதாத்யயனமோ, ஜப ஹோமாதி நித்ய நைமித்திகமான எந்த வைதிக கர்மமோ பண்ணக் கூடாது. ஆபத் காலமாக இருந்தால் அந்தக் காலத்திற்கு மாத்திரம் போதுமான தான ப்ரதிக்ரஹங்களைப் பண்ணலாம். பிள்ளை பிறந்த நாளில், பிதா தானம் பண்ணலாம்.

தீட்டு இல்லாதவர்கள் அந்த தானத்தை வாங்கிக் கொள்ளலாம். கிரஹண காலத்தில் பண்ணவேண்டிய ஸ்நான தான சிராத்தாதிகளுக்கு நிஷேதம் கிடையாது. மற்ற அமாவாஸை மாஸப் பிறப்புத் தர்ப்பணங்கள், சிராத்தம் முதலிய கர்மாக்கள் எதுவும் பண்ணக்கூடாது.

சௌச ஆசமன ஸ்நான போஜன நியமங்களையும் அஸ்ப்ருச்யஸ்பர்ச நிமித்தக ஸ்நானத்தையும் விடக் கூடாது. ஸ்நானம் என்றால் முழுகுவது மட்டுமே. ஸங்கல்பம், கங்கா ஆவாஹனாதி ஸ்நானாங்க தர்ப்பணம் எதுவும் கிடையாது. ப்ரேத ஸ்நானத்தை நதிகளில் எப்பொழுதும் (ராத்ரியிலும்) பண்ணலாம். ஸந்தியோ பாஸனத்தில் மந்திரமில்லாமல் ப்ராணாயாமம் பண்ணி மற்றவைகளை மனஸ்ஸால் மந்திரங்களை உச்சரித்துச் செய்ய வேணும். ப்ராணாயாமத்தில் மனஸ்ஸாலும் மந்திரத்தை உச்சரிக்கக் கூடாது. தேவதாராதன வந்தன தேவாலய ப்ரவேசாதிகள் பண்ணக் கூடாது. ஸன்னிதிக்கு தூரத்திலிருந்து அபிகமனம் மாத்திரம் பாஷா ப்ரபந்தாதிகளாலே பண்ணலாம். பகவத்யான நாம ஸங்கீர்த்தனாதிகளைப் பண்ணலாம். பஞ்ச கவ்ய, ஸ்ரீபாத தீர்த்தாதி ப்ராசனாதிகள் பண்ணக்கூடாது.

3. ஆசௌசியின் ஸொத்துக்களுக்கு அசுத்தி

ஆசௌசமுள்ளவனுடைய க்ருஹங்களுக்கும், திரவ்யங்களுக்கும் ஆசௌசம் நிவர்த்தியாகும் வரையில் அசுத்தி உண்டு. ஆசௌசியின் தயிர், பால், நெய், கறியமுது புஷ்பம், எள்ளு, மருந்து, கிழங்கு, பழம், தேன், கிணற்று நீர் ஆகியவைகளை அவனுடைய அனுமதியால் தீட்டில்லாதவர்கள் தாமே கிரஹித்துக் கொள்ளலாம். அன்ன சத்திரம் வைத்தவனுடைய அரிசி முத

லான அபக்வ வஸ்துக்களை க்ரஹிக்கலாம். பிள்ளை பிறந்த நாளில் பிதா செய்யும் தானங்களை வாங்கலாம். தீட்டு வரப்போகிறதென்று, ஸந்தேஹித்து முன்பே இது தேவார்த்தம், இது ப்ராம்மணார்த்தம், என்று ஸங்கல்பித்து வைத்த இடம், திரவ்யங்களுக்கு தோஷம் கிடையாது.

அதிக்ராந்தாசௌசத்திலும், ஸம்பர்க்கா சௌசத்திலும் த்ரவ்யாதி (ஸொத்து)களுக்கு தோஷம் கிடையாது. ஸம்பர்க்கா சௌசமாவது ஸம்பர்க்கத்தால் (சேர்க்கையினால்) ஏற்படுவது. ஸம்பர்க்கமாவது, கர்மத்தைப் பண்ணி வைப்பது, பில் வாங்கிப் பண்ணுவது, தீட்டுக்காரர்களோடு கூடஇருப்பது, அவர்களோடு ஒரே பந்தியில் சாப்பிடுவது ஆகியவைகளாம். பர்த்தாவுக்கு ஏற்படும் ஆசௌசம் எல்லாம் பத்நிக்குமுண்டு. பத்நிக்கு மட்டும் சில தீட்டுகள் உண்டு. அவற்றில் பர்த்தாவுக்குத் தீட்டு கிடையாது. பத்நிக்கு முன்பே தெரிந்திருந்து தீட்டு கழிந்திருந்தால், புருஷனுடைய அதிக்ராந்தா சௌசத்தால் பத்நிக்குத் தீட்டு கிடையாது. பர்த்தாவுக்கு முன்பே தீட்டு தெரிந்து கழிந்த பிறகு பத்நிக்கு அந்த தீட்டு தெரிந்தால் அதிக்ராந்த ஆசௌசம் உண்டு.

4. ஸ்பர்ச தோஷம்

ஒரு ஆசௌசமுள்ளவனை இன்னொரு ஆசௌசமுள்ளவன் தொட்டால் ஸ்நானம் செய்து க்ருச்ரமும் பண்ணிக்கொள்ள வேண்டும். ஞாதிகளுக்குள் இந்த தோஷம் இல்லை. சாவாசௌசியை ஆசௌசம் நிவர்த்தியாகும் வரையில் தீட்டில்லாதவன் தொட்டால் ஸ்நானம் பண்ண வேண்டும். ஜாதாசௌசத்தில் ப்ரஸவித்தவளுக்கு மாத்திரம் தொடக்கூடாத தீட்டு உண்டு. அது பிதாவுக்கு புத்ரன் பிறந்ததைக் கேட்டவுடன் செய்ய வேண்டிய ஸ்நானம் வரையில்தான். இரட்டைக் குழந்தை

பிறந்தால்தான் பிதாவுக்கு பத்து நாட்களும் தொடக் கூடாமலிருக்கும்படியான தீட்டு. ஆனால் ஞாதிகளுக்குத் தொடக்கூடாமலிருக்கும்படியான தீட்டே கிடையாது; கர்மாதிகாரம் இல்லாதிருக்கும்படியான தீட்டு மாத்திரம் தான் உண்டு" என்பது ஒரு பக்ஷம். "ப்ரஸவித்தவள் தவிர, பித்ராதி ஞாதிகளுக்கும் நாலு நாள் வரைக்கும் தொடக் கூடாதிருக்கும்படியான தீட்டு உண்டு. அதற்கு மேல் பிறந்ததிலிருந்து பத்தாவது நாள் வரை கர்மாதி காரம் இல்லை யென்கிற தீட்டு மாத்திரம் உண்டு" என்பது மற்றொரு பக்ஷம். ஆனால் பிறப்புத் தீட்டு உள்ள ஞாதிகளையும் பத்து நாள் வரையில் ஆசௌச மில்லாதவன் தொடுகிற வழக்கமில்லை.

ஒரு ஆசௌசியின் அன்னத்தை அதே ஆசௌச முள்ள வேறொருவன் சாப்பிட்டால் தோஷம் கிடையாது. ஆசௌச நிமித்தம் ஒன்றாயிருந்து, ஆசௌச காலமும் ஸமமாக இருந்தாலும் பாதகமில்லை. (உதாரணம்: உபநீத பாகினேய மரணத்தில் மாதுலனும், மூன்று நாள் தீட்டுக்கார ஞாதியும் பரஸ்பரம் சாப்பிடுவது). வேறு ஆசௌசமுள்ளவனோ அல்லது ஆசௌச மில்லாதவனோ சாப்பிடக்கூடாது. சாப்பிட்டால் பஞ்சகவ்ய ப்ராசனம் முதலிய ப்ராயச் சித்தங்களுண்டு. சாதம் போடுகிற வனுக்கும், சாப்பிடுகிறவனுக்கும் ஆசௌசம் தெரியாம லிருந்தால் தோஷமில்லை. இவர்களுக்குள் யாருக்காவது ஒருவருக்கு ஆசௌசம் தெரிந்திருந்தால் ஆசௌசியின் அன்னத்தைச் சாப்பிட்டவனுக்கு தோஷமுண்டு. ச்ராத் தாதிகள் ஆரம்பித்த பிறகு ஆசௌசம் தெரிந்தால் ஆசௌச மில்லாதவர்களைக் கொண்டு ஆசௌசியின் அன்னத்தைப் போடச் சொல்லிச் சாப்பிட்டால் தோஷ மில்லை. யஜமானனுக்கு ஸ்நான மாத்ரத்தால் அந்தக் கர்மாவை முடிக்கச் சுத்தியுண்டு. ப்ரம்மசாரியானவன் தீட்டு அன்னத்தைச் சாப்பிட்டால் பத்து நாட்கள் அசுத்தியுண்டு.

மனுஷ்யனுடைய ஈரமான எலும்புகளைத் தொட்டால் மூன்று நாட்கள் தீட்டு உண்டு. உலர்ந்த எலும்பானால் ஒரு நாளாசௌசம். புத்தி பூர்வகமாக இல்லாவிடில் ஆசமனம் செய்யவேண்டும்.

5. ஜாதா சௌசம்

(பிறப்புத் தீட்டு)

ஒரு புருஷப்ரஜை (ஆண் குழந்தை) பிறந்தால் ஸபிண்டர்களான ப்ராம்மணர்களுக்கு பத்து நாள் தீட்டு. ஸபிண்டர்களாவது புருஷனுடைய மூல புருஷனில் ஆரம்பித்து ஏழு தலைமுறைக்கு உட்பட்டவர்கள். ஸ்த்ரீ ப்ரஜைக்கு (பெண்குழந்தைக்கு) மூன்று தலைமுறைக்கு உட்பட்டவர்கள் ஸபிண்டர்கள். அதாவது பிறந்த பெண் குழந்தையின் ஸமானோதர, பின்னோதர ப்ராதா, குழந்தையினுடைய தகப்பன், தகப்பனின் ஸஹோதரன், பின்னோதர ப்ராதா, அவனுடைய பிள்ளைகள், பிறந்த குழந்தைக்குப் பிதா மஹன், அவனுடைய பின்னோதர ஸஹோதரர்கள், ஆகியவர்கள். இவர்களுக்கு ஸ்த்ரீசிசு ஜனனத்திலும் பத்து நாள் ஆசௌசம். (க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரர்களுக்கு க்ரமமாக பதினாறு, இருபது, முப்பது நாள் ஆசௌசம்). ஏழு தலைமுறைக்கு மேற்பட்டு பதினான்கு தலைமுறை வரையில் உள்ளவர்கள் ஸமானோதகர்கள். இவர்களுக்கு மூன்று நாள் ஆசௌசம். தலைமுறை தெரியாமற் போனால் தீட்டு கிடையாது; ஸ்நான மாத்ரம் உண்டு.

பிண்டாக்ருதியாக இராமல் ஐந்து, ஆறுவது மாஸங்களில் கர்ப்ப நாச மேற்பட்டால் பிதாவுக்கும் ஸபிண்டர்களுக்கும் ஸ்நானமுண்டு. அதுவே மாம்ஸ பிண்டாக்ருதியாக இருந்தால் பிதாவுக்கும் ஸபிண்டர்களுக்கும் மூன்று நாள் ஆசௌசம். நான்காவது மாஸத்தில் கர்ப்ப நாச

மேற்பட்டால் பிதாவுக்கு மட்டும் ஸ்நான மாத்ரம். ஏழாவது மாஸம் முதல் பிறந்து இறந்தாலும், இறந்து பிறந்தாலும், பிதாவுக்கும் ஸபிண்டர்களுக்கும் பூர்ண ஆசௌச முண்டு.

தாயாருக்கு மூன்று மாஸங்கள் வரையில் கர்ப்ப நாச மேற்பட்டால் மூன்று நாள் ஆசௌசம். அதற்கு மேல் நான்காவது மாஸத்தில் நாலு நாள், ஐந்தாவது மாஸத்தில் ஐந்து நாள்; ஆருவது மாஸத்தில் ஆறு நாள்; ஏழாவது மாஸம் முதற்கொண்டு ஸ்த்ரீ ப்ரஜை யானுல் நாற்பது நாள்; புருஷ ப்ரஜையானுல் முப்பது நாள் ஆசௌசம். பத்து நாள் வரையில் ப்ரஸவித்த வளைப் பார்க்கவும், அவள் குரலைக் கேட்கவும் கூடாது. தீட்டுப் போகிறவரையில் தொடக்கூடாது.

ரஜஸ்வலைகளுக்கு (பஹிஷ்டைகளுக்கு) ரஜோதர் சன தினம் முதல் மூன்று நாள் தீட்டு. அதற்குமேல் பன்னிரண்டு நாளுக்குள் ரஜோதர்சனம் நேர்ந்தால் சௌச மாத்ரம். பன்னிரண்டு நாளுக்கு மேல் பதினேழு நாள் வரையில் ஸ்னுனத்தால் சுத்தி. பதினெட்டாவது நாள் முதல் மூன்று நாள் தீட்டு.

ராத்ரி வேளையில் மரண, ஜனன, ரஜோதர்சனுதிகள் நேர்ந்தால் ராத்ரியின் மொத்த நாழிகையை எட்டு பங்காகப் பிரித்து அதில் முந்திய ஐந்து பங்கிற்குட் பட்டால் முதல் நாளென்றும், பிந்திய மூன்று பங்கிற்குட் பட்டால் மறு நாளென்றும், தெரிந்து கொள்ளவேண்டும்.

6. சாவாசௌசம்

(இறப்புத் தீட்டு)

பிறந்த புருஷப்ரஜை ஆறு மாஸத்திற்குள் எப் பொழுது மரித்தாலும் ஸபிண்டஞாதிகளுக்கு ஸ்நான மாத்ரம். ஆறு மாஸத்திற்குமேல் இரண்டு வருஷத்திற்குள் மரித்தால் ஒரு நாள் ஆசௌசம். மூன்ருவது வயது

முதல் ஏழாவது வயதிற்குள் மரணமடைந்தால் மூன்று நாள். ஏழாவது வயது முதல் மரித்தால் பத்து நாள்.

பிறந்த பத்து தினங்களுக்குமேல் ஸ்த்ரீப்ரஜையோ, புருஷப்ரஜையோ, எப்பொழுது இறந்தாலும் ஸமாேேதர, பின்ேேதரப்ராதாக்களுக்கும், மாதா, பிதாக்களுக்கும், பத்து நாள் ஆசௌசம். மேலே கூறிய பித்ருப்ராதாக்களைக் காட்டிலும் வேறான கன்யா ஸபிண்டர்களான மூன்று தலைமுறைக்கு உட்பட்டவர்களுக்கு, இரண்டு வயதிற்குள் கன்யா மரணத்தில் ஸ்நானம். அதற்குமேல் கன்யாதானம் பண்ணப்படும் வரையில் (ஆறு வயது பூர்த்தியாகும்வரை) ஒரு நாளும், அதற்கு மேல் விவாஹம் வரையிலோ விவாஹமாகாத பக்ஷத்தில் ருது ஆகிறவரையிலோ மூன்று நாள் ஆசௌசம். கல்யாண மாகாமல் ருதுவான பிறகு மரித்தால் பத்து நாளாசௌசம். புண்ய க்ஷேத்ரங்களில், புண்ய காலாதிகளில் ஸத்பாத்ரத்தில் கன்யகையை தானம் பண்ணி பிறகு கால விசேஷத்தில் யதாவத்தாக விவாஹம் செய்து கொடுக்க சாஸ்த்ரம் உண்டு. அப்படி தானம் பண்ணி விவாஹம் நடைபெறுவதற்கு முந்தியே மரித்தால், இவள் மரணத்தில் கன்யா ஸபிண்டர்களுக்கும், வரனுடைய ஸபிண்டர்களுக்கும் மூன்று நாள் ஆசௌசம்.

பிறந்த குழந்தை பத்து நாளுக்குள் மரித்தால் கனனமே (புதைப்பது) ஸம்ஸ்காரம். பத்து நாளைக்கு மேல் ஆறு மாஸத்திற்குள் மரித்தால் கனனமாவது தஹனமாவது பண்ணலாம். ஆறு மாஸத்திற்குமேல் இரண்டு வயதிற்குள் மரித்தால், கனனம், தஹனம், த்யாகம் ஆகியவைகளில் ஏதாவதொன்றைச் செய்யலாம். இரண்டு வயதிற்கு மேற்பட்டால் தஹனமாத்ரம் ஸம்ஸ்காரம்.

ஆறு மாஸத்திற்குள் கனனம் செய்வதானால் ஞாதிகளுக்கு ஸ்நான மாத்ரம். தஹனம் பண்ணுவதானால் ஒரு நாள் ஆசௌசம், ஆறு மாஸத்திற்கு மேற்பட்டு கனனம் பண்ணுவதானால் ஒரு நாள் ஆசௌசம். தஹனமோ

த்யாகமோ பண்ணுவதானுல் மூன்று நாள். மேற்சொன்ன ஸ்நானம், ஒரு நாள் ஆசௌசம், மூன்று நாள் ஆசௌசம், ஆகியவைகள் கனுதி ஸம்ஸ்காரங்கள் ஆனதிலிருந்து அனுஷ்டிக்கப்பட வேண்டியவை. மரண தினம் முதலாக அன்று. ஆகையால் பூர்வதின ராத்ரியில் மரித்த குழந்தைக்கு மறுநாள் ஸம்ஸ்காரம் செய்தால் மறுதினம் முதற் கொண்டுதான் ஒரு நாள், மூன்று நாள், என்று கணக்கிடப்படவேண்டும். இதுபோல ஆஹிதாக்நி யின் மரணத்திலும் ஸமஸ்கார தினம் முதலாகவே ஆசௌச தினங்களேக் கணக்கிட வேண்டும்.

(பத்து நாள் தீட்டு)

ஸபிண்டஞாதி மரணத்தில் பத்து நாள் தீட்டு:— ஆஹிதாக்நி விஷயத்தில் புனர் தஹனம் (அஸ்திக்கு) நடந்தால் அது முதற்கொண்டு ஞாதிகளுக்கு பத்து நாள் ஆசௌசம். அஸ்தியில்லாத தர்பாதி ஸம்ஸ்கார மானுல் மூன்று நாள். அனுஹிதாக்நி விஷயத்தில் முன்பே ஆசௌசம் அனுஷ்டித்திருந்தால் புனர்தா ஹத்தில் ஞாதிகளுக்கு மூன்று நாள் ஆசௌசம். இல்லா விடில் பத்து நாள். தர்பத்தால் புனஸ் ஸம்ஸ்காரம் நடந்தால் புத்ரர்களுக்கு பத்து நாள். தாயார் தகப்பனுர் மரணத்தை ஸஞ்சயனத்திற்குப் பிறகு எப்பொழுது கேட்டாலும், கேட்டது முதல் புத்ரர்களுக்கும், புத்ரர் களின் பத்நிகளுக்கும், இறந்தவன் பத்நிக்கும், பத்து நாள். ஸபத்நீ மாதாவின் மரணத்தைக் கேட்டால் ஒரு வருஷத்திற்குள் பத்து நாள். வருஷத்திற்குமேல் மூன்று நாள். இவர்கள் விஷயத்தில் வேறு புத்ரர்களால் க்ரியை நடந்திருந்தால் ஸபத்நீ மாத்ரு மரணத்தில் வருஷத் திற்குமேல் ஒரு நாள். மாத்ரு, பித்ரு விஷயத்தில் ஜ்யேஷ்ட புத்ரேதர புத்ரர்களுக்கு மூன்று நாள். ஜ்யேஷ்டனுக்கு கேட்டது முதல் பத்து நாள். ஞாதிகள் பத்து நாள்களுக்குள் கேட்டால் பத்து நாளில் மீதி

நாளுக்கு மட்டும்தான் ஆசௌசம். புத்ரனும் ஸஞ்சய னத்திற்கு முன் கேட்டால் மீதி நாள்தான். ஸஞ்சயனத் திற்கு பிற்பாடு கேட்டால் கேட்டது முதல் பத்து நாள். புத்ரனுக்கு உபநயனாதிகளைப் பண்ணி வைத்து ஜீவன வ்ருத்தியையும் கல்பித்து வைத்தவன் மஹாகுரு. அந்த மஹாகுருவின் மரணத்தில் புத்ரனுக்கு பன்னிரண்டு நாள் ஆசௌசம்.

7. அதிக்ராந்தா சௌசம்

(கடந்துபோன தீட்டு)

ஜனனாசௌசம் (பிறப்புத் தீட்டு) பத்து நாள் கழித்துத் தெரிந்தால் அதிக்ராந்தாசௌசம் கிடையாது. தகப்பனாருக்கு மட்டும் ஸ்நான மாத்ரம். சாவாசௌசம் பத்து நாள் கழித்துத் தெரிந்தால் ஸபிண்டர்களுக்கு மூன்று மாஸம் வரையில் மூன்று நாள். நான்காவது மாஸம் முதல் ஆறுவது மாஸத்திற்குள் தெரிந்தால் பக்ஷிணீ. அதாவது இரண்டு ராத்ரியோடு கூடிய ஒரு பகலோ, இரண்டு பகலோடு கூடிய ஒரு ராத்ரியோ ஆகிய மூன்று காலம். ஏழாவது மாஸம் முதல் வருஷ முடிவிற் குள் கேட்டால் ஒரு நாள். வருஷத்திற்கு மேல் ஸ்நானம் மாத்திரம்.

ஜ்யேஷ்ட புத்ரனுக்கு மாதா பிதாக்கள் மரணத் திலும், பத்நிக்கு பர்த்தாவின் மரணத்திலும், எப் பொழுது கேட்டாலும் பத்து நாளா சௌசம். கனிஷ் டனால் க்ரியைகள் பண்ணப் பட்டிருந்தாலும் மேற்படி ஆசௌசமுண்டு. உதகதானம் ஸபிண்டீகரணம் மட்டுப் பண்ண வேண்டும். ஜ்யேஷ்டனால் க்ரியை செய்யப் பட்டு கனிஷ்டன் ஒரு வருஷத்திற்குள் எப்போது கேட் டாலும் பத்து நாள் ஆசௌசம். க்ரியை ஒன்றும் பண்ண

வேண்டியதில்லை. உதகதானம் மாத்திரம் செய்தால் போதும். வருஷம் கழித்துக் கேட்டால் மூன்று நாள். இப்போதும் உதகதானம் பண்ணவேண்டும்.

ஸமானோதகர்களுக்கு மூன்று நாட்களான பிறகு பத்து நாளுக்குள் தெரிந்தால் ஒருநாள் ஆசௌசம். பக்ஷிண்யாசௌசிகளுக்கு மூன்று காலம் கழித்து பத்து நாளுக்குள் கேட்டால் ஒருகாலம் (பகலோ ராத்திரியோ) ஆசௌசம். ஒருநாள் தீட்டுக் காரர்களுக்கு ஒருநாளான பிறகு எப்பொழுது கேட்டாலும் ஸ்நான மாத்ரம். மூன்று நாள் பக்ஷிண் யாசௌசிகள் பத்து நாள் கழித்துக் கேட்டால் ஸ்நான மாத்ரமே. உபநயனமாகாமல் ம்ருத மானவன் விஷயத்தில் பித்ரு, பிராத்ரு, வ்யதிரிக்தர் களான ஸபிண்டர்களுக்கு அதிக்ராந்தாசௌசம் கிடை யாது. பித்ரு ப்ராதாக்களுக்கு மாத்திரம் மேலே சொன்னபடி அதிக்ராந்தாசௌசம் உண்டு. ப்ரம்ம சாரிக்கு வ்ரத ஸமாப்தி ஏற்படுகிறவரை தசராத்ராதி ஆசௌசம் கிடையாது. வ்ரதங்கள் முடிந்த பிறகு விவாஹமாகாமலிருந்தால் அந்த ஸமயத்தில் ஞாதி மரணம் நேர்ந்தாலோ, தெரிந்தாலோ மூன்று நாள் ஆசௌசம் உண்டு. முன்பே தெரிந்திருக்கும் ஆசௌசங் களுக்கு வ்ரதம் முடிந்த பிறகு அதிக்ராந்தாசௌசம் அனுஷ்டிக்க வேண்டியதில்லை.

பத்து நாள் தீட்டை பத்தாவது நாள் ராத்ரியிலும் மூன்று நாள் தீட்டை மூன்றும் நாள் ராத்ரியிலும் கேட்டால் மறுநாள் தர்ப்பணம் பண்ணக்கூடிய தகப்ப னில்லாதவனுக்கு தர்ப்பணம் பண்ணுவதற்காக மறு நாளும் அசுத்தியுண்டு. அதிக்ராந்தமாக வரும் மூன்று நாள், ஒரு நாள், பக்ஷிணி தீட்டை கடைசி நாள் ராத்ரி யில் கேட்டால் தர்ப்பணம் செய்யவேண்டியவர்களுக்கு மறுநாள் தர்ப்பணம் செய்ததற்காக அசுத்தி உண்டு. மற்றவர்களுக்கு அன்றிரவே கழியும்.

"தீட்டிருந்தால் தான் தர்ப்பணம் பண்ணவேண்டும். பகலில் கேட்டால் உடனே தர்ப்பணம் பண்ணவேண்டும்; ராத்ரியில் கேட்டால் அப்போது தர்ப்பணம் பண்ணக் கூடாதாகையால் தர்ப்பண மில்லாமலேயே தீட்டு கழிந்து விடுகிறது; ஆகையால் மறுநாள் தர்ப்பணம் பண்ணி தீட்டு அனுஷ்டிக்கவேண்டு மென்பதில்லை." என்பது ஒரு பக்ஷம். இப்படியும் பெரியோர்களின் அனுஷ்டானம் உண்டு.

8. அக ஸன்னி பாதம்

(தீட்டுக்களின் சேர்க்கை)

பத்து நாள் ஜனனா செளசத்தில் வேறொரு ஜனனா செளசம் பத்து நாளோ மூன்று நாளோ வந்தால் அது முந்தைய ஆசெளசத் தோடேயே போய்விடும். சாவா செளசம் வந்தால் போகாது. சாவாசெளசத்தில் ஜனனா செளசம் வந்தால் சாவாசெளசத்தோடேயே ஜனனா செளசம் போய்விடும். ஜனனாசெளச மத்யத்தில் ஜாதமான குழந்தை மரித்தால் அந்த ஆசெளசமானது பிதாவுக்கும், ப்ராதாக்களுக்கும் ஜனனா செளசத் தோடேயே போய்விடும். ஜனனா செளசத்தின் கடைசீ நாளில் மரித்தால் பிதாவுக்கு மட்டும் மேலே இரண்டு நாளாசெளசம். கடைசீ நாள் கடைசி யாமத்தில் மரித்தால் மூன்று நாள்.

ஸ்வல்பா செளசத்தில் தீர்க்கா செளசம் வந்தால் போகாது. பத்து நாள் பூர்வா செளசத்தினுடைய கடைசீ நாளில் மற்றொரு பத்து நாளாசெளசம் உண்டாகித் தெரிந்தால் பூர்வா செளசம் கழிந்த பிறகு இரண்டு நாள் கழித்துத் தான் இந்த ஆசெளசம் போகும். தசராத்ர பூர்வா செளசக் கடைசீ தினத்தின் கடைசீ யாமத்தில் மற்றொரு தசராத்ரா செளசம் உண்டாகித் தெரிந்தால்

பூர்வா சௌசத்திற்கு மேல் மூன்று நாள் கழித்துத் தான் இந்த ஆசௌசம் போகும். பூர்வாசௌசம் கழிவதற்குள் தெரியாமற்போனுல் பின்வரும் ஆசௌசத்தை முழுவதுமாக அனுஷ்டிக்கவேண்டும். பூர்வாசௌசம் அனுஷ்டிக்கும் காலத்தில் த்ரிராத்ராதி அல்பாசௌசங்கள் எப்பொழுது வந்தாலும் பூர்வாசௌசத்தோடேயே போய் விடும். பத்து நாள் பிறப்புத் தீட்டில் சாவுத் தீட்டு அல்பமாயிருந்தாலும் போகாது. அல்பமான சாவுத் தீட்டில் அதிகமான பிறப்புத் தீட்டும் போகாது.

ஞாத்யாசௌசத்தில் மாதா பித்ருக்கள் ஆசௌசம் வந்தாலும் மாதாவினுடைய ஆசௌசத்தில் பிதாவினுடைய ஆசௌசம் வந்தாலும் பூர்ணமாகப் பத்து நாட்களும் ஆசௌச மனுஷ்டிக்கவேண்டும். பிதாவினுடைய ஆசௌச மத்யத்தில் மாதாவின் ஆசௌசம் வந்தால் பிதாவினுடைய ஆசௌசத்திற்குப் பிறகு பக்ஷிண்யாசௌசம் உண்டு. ஞாத்யாசௌச மத்யத்தில் பத்நீ மரணத்தில் பர்த்தாவுக்கும், பர்த்தா மரணத்தில் பத்நிக்கும், புத்ரர் மரணத்தில் மாதா பிதாக்களுக்கும் மரணம் முதல் பத்து நாளாசௌசம் உண்டு.

ஞாதியினுடைய ஆசௌசத்தில் ஒருவனுக்குப் பிள்ளை பிறந்தால் அந்தத் தாயாருக்கும் தகப்பனுருக்கும் பூர்ணமான ஜாதா சௌசம் உண்டு. முந்தைய ஞாதி தீட்டாலே போகாது. அதுபோல் ஞாத்யாசௌசத்தில் வேெருரு ஸபிண்டருக்கு அக்நிதஹனுதி ஸம்ஸ்காரம் பண்ணினவனுக்கு பூர்ணுசௌசம் உண்டு. முந்தைய ஆசௌசத்தால் போகாது. மாதா பிதாக்கள் தவிர வேறு அநேகம் பேர்களுக்குப் பத்து நாள்களுக்குள் க்ரமேண தஹன ஸம்ஸ்காரம் பண்ண நேர்ந்தால், அந்த ஸம்ஸ்காரம் பண்ணினவனுக்கு முதல் தீட்டிலேயே எல்லாத் தீட்டுகளும் போய்விடும். அந்த ஆசௌச நடுவில் மாதா பித்ரு மரணம் நேர்ந்தால் மாதா பித்ரு மரணுதியாகப் பத்து நாள் ஆசௌசம் உண்டு. ஜனனு

21-9-75

சௌசத்தாலே மரண சௌசத்தையும், அல்பா சௌசத்தாலே தீர்க்கா சௌசத்தையும் கழிக்கிற வழக்கமில்லை.

9. மூன்று நாள் தீட்டு

மாதாமஹன், மாதாமஹி, அம்மான், அம்மாமி, மாமனார், மாமியார், மாதா பித்ரு ஸஹோதரிகள், உபநயனமான மருமான், தௌஹித்ரன், ஸமானோதகன், விவாஹமான ஸஹோதரி, ஜனகமாதா, ஜனகபிதா, அசலாருக்கு தத்தனான பிள்ளை, மூன்று முதல் ஆறு வயதிற்குட்பட்ட ஸபிண்ட புருடன், ஏழு வயது முதல் விவாஹம் வரையில் மூன்று தலைமுறைக்குட்பட்ட பெண் இவர்களின் மரணத்தில் புருஷனுக்கு மூன்று நாள் ஆசௌசம். இந்த ஆசௌசம் புருஷனுடைய பத்நிக்குமுண்டு. ஸ்த்ரீகளுக்கு உபநயமான ஸஹோதரன், உபநயமான மருமான் உபநயமான ஸஹோதரியின் பிள்ளை ஸபத்நீமாதாஇவர்கள் மரணத்தில் மூன்று நாள் ஆசௌசம். இந்த, ஆசௌசம் ஸ்த்ரீயின் பர்த்தாவுக்கு இல்லை.

ஆசார்யன், ஆசார்ய பத்நீ, அவர்களுடைய பிள்ளை, அந்தேவாஸீ (சிஷ்யன்), ருத்விக்கு, யஜமானன், இவர்களுடைய மரணத்தில் பரஸ்பரம் மூன்று நாள் ஆசௌசம் அனுஷ்டிக்க வேண்டும். ஆசார்யனாவது உபநயனம் பண்ணி, வேதத்தை அங்கங்களோடு சொல்லிக் கொடுத்தவன், ஸமாச்ரயணம், மந்த்ரோபதேசம், ப்ரபத்தி ஆகியவற்றில் ஒன்றைச் செய்தவர்களும் ஆசார்யர்களே. இவர்கள் விஷயத்திலும் மூன்று நாள் ஆசௌசம் உண்டு. அவன் ஞாதியாக இல்லாமலிருந்தால் மூன்று நாள் ஆசௌசம். ஸ்வக்ருஹத்தில் வேறொரு ச்ரோத்ரியன் ம்ருதமானால் அந்த க்ருஹஸ்வாமிக்கு மூன்று நாள் ஆசௌசம்.

ஒருத்தி பிதா மாதா ப்ராதாக்களின் கிரஹத்தில் பிரஸவித்தாலோ ப்ரஸவத்திற்கு அவர்களின் திரவ்யம் பயன்பட்டாலோ அவளுடைய மாதா பிதா ப்ராதாக்களுக்கு மூன்று நாள் ஆசௌசமுண்டு. ப்ராதாவுக்கு ஒரு நாள் என்று சிலர் கூறுவர்.

அவள் மாதுலன் போன்ற பந்துக்களின் கிரஹத்தில் ப்ரஸவித்தாலோ அவர்கள் த்ரவ்யம் ப்ரஸவத்திற்குப் பயன்பட்டாலோ அந்த மாதுலன் ஆகியோருக்கு ஒரு நாள் தீட்டு. அபந்துக்கள் கிரஹத்தில் பிரஸவித்தாலும் ப்ரஸவித்தவள் ம்ருதையானாலும் அபந்துக்களுக்கு தீட்டுக் கிடையாது.

ஒருத்தி, தன் தாயார் தகப்பனார் மாதுலன் போன்ற பந்துக்களின் கிரஹத்தில் பிரஸவிக்காமலிருந்தாலும் அந்த பந்துக்களின் த்ரவ்யம் ப்ரஸவத்தில் உபயோகப் படாமலிருந்தாலும் அந்த பந்துக்களுக்குத் தீட்டு இல்லை. பெண்களுக்கு தாயார் தகப்பனார் மரணத்தில் ஸன்னிஹித தேசத்தில் இருந்தால் மூன்று நாள் தீட்டு. தூரதேசத்திலியிருந்தால் பக்ஷிணி. தூரதேசமாவது அறுபது யோஜனை தூரமுள்ள தேசம். இதுபோல் பெண்கள் மரணத்தில் தாயார் தகப்பனார்களுக்கும் ஆசௌசம் உண்டு.

பராச்ரித பார்யைக்கும் அவளுடைய பர்த்தாவுக்கும் மரணத்தில் பரஸ்பரம் மூன்று நாள். அவளுக்கும் அந்த பர்த்தாவின் ஞாதிகளுக்கும் பரஸ்பரம் ஒரு நாள் தீட்டு. அநேக பிதாக்களுக்கு ஏக மாதாவினிடத்தில் பிறந்த பிள்ளைகளுக்கு பரஸ்பரம் மரணத்தில் மூன்று நாள் தீட்டு. ஜனனத்தில் ஒரு நாள் தீட்டு.

க்ஷேத்ரஜன் முதலிய புத்ரர்களுடைய ஜனன மரணங்களில் அந்த பித்ருக்களுக்கும் அந்த பித்ராதி மரணங்களில் அந்த க்ஷேத்ரஜன் முதலிய புத்ரர்களுக்கும் பரஸ்பரம் மூன்று நாளாசௌசம். க்ஷேத்ரீ, பீஜீ என்னும் இருவகையான பித்ருக்களுடைய ஸபிண்டர்களுக்கு

உபநீத க்ஷேத்ரஜன் முதலியவர் மரணத்தில் ஒரு நாள் ஆசௌசம் உண்டு. உபநயனமாகாமல் ம்ருதமானுல் ஸ்னன மாத்ரம்.

ஸமானோதகனுடைய ஜனனத்திலும், உபநயனனந்தரம் மரணத்திலும் மூன்று நாள் ஆசௌசம். உபநயனத்திற்கு முன்பு ஸ்நான மாத்ரம்.

10. பக்ஷிணித் தீட்டு

சிறிய தாயாருடையவும், பெரிய தாயாருடையவும் பெண்கள், பிள்ளைகள், தூர தேசத்திலுள்ள உடன் பிறந்தாள், சிறிய, பெரிய தகப்பனர்களின் பெண்கள், உடன் பிறந்தாள் பெண், அத்தையின் பெண், அத்தையின் பிள்ளை, அம்மானின் பெண், பிள்ளை, ப்ராதாவின் பெண், பெண்ணின் பெண், பிள்ளையின் பெண், உபநயனமாகாத மருமான், உபநயன மாகாத தௌஹித்ரன் இவர்கள் மரணத்தில் புருஷர்களுக்கு பக்ஷிண்யாசௌசம்,

பித்ருவ்யன் (தகப்பனேடு கூடப் பிறந்தவன்) தாயாருடன் பிறந்தவள், அம்மான், அத்தை, மேற் கண்டவர்களின் பெண், பிள்ளைகள், பெண்ணின் பெண்கள், பிள்ளையின் பெண், பிதாமஹி, பிதா மஹன், மாதா மஹன், மாதாமஹி, ஸஹோதரீ, ஸஹோதரியின் பெண், இவர்கள் மரணத்தில் ஸ்த்ரீகளுக்கு பக்ஷிண்யாசௌசம். ஸப்ரும்ஹசாரி, ஸஹாத்யாயிகளுடைய மரணத்தில் பரஸ்பரம் பக்ஷிணீ.

11. ஒரு நாள் தீட்டு

க்ஷேத்ரஜனுக்கு, க்ஷேத்ரீ பீஜீ என்னும் இருவகை பிதாக்களுடைய தாயார் தகப்பனர்கள் இருவகை பிதாக்களின் பத்நினிகளுடைய தாயார் தகப்பனர்கள் இரு

வகை பிதாக்களுக்கு ப்ராதாக்களான பித்ருவ்யர்கள், இரு வகை மாதாக்களுக்கு ப்ராதாக்களான மாதுலர்கள், இவர்களது பத்னிகள் இருவகை சிறிய தாயார், பெரிய தாயார் இருவகை அத்தை இருவகை அம்மாஞ்சி இருவகை அம்மங்கார் இருவகை அத்தான் இருவகை அத்தங்கார் இருவகை தம்பி தமையன் தங்கை தமக்கை ஆகியவர்களுடைய மரணத்தில் பரஸ்பரம் ஒரு நாள் ஆசௌசம்.

ஸபத்நீ மாதாவின் ஸஹோதரன், ஸஹோதரீ, பெண், இவர்களுடைய பெண், பிள்ளை, மைத்துனன், பின்னோதரர்களான சிறிய தகப்பன், பெரிய தகப்பன் ஆகியோரின் பெண், பின்னோதரப்ராதாவின் பெண், பின்னோதர அத்தை, அவளுடைய பெண், பிள்ளை, ஸபத்நீ மாதாவின் தகப்பன், தாயார், ஆறு வயதிற்குட்பட்ட மூன்று தலைமுறைக்குட்பட்ட ஞாதி பெண், பத்நியும், ஸந்ததியும் இல்லாத விஷயத்தில் மாமனர், மாமியார், ஆறு மாஸத்திற்கு மேல் இரண்டு வயதிற்குட்பட்ட ஞாதியின் பிள்ளை இவர்கள் மரணத்தில் புருஷனுக்கு ஒரு நாளாசௌசம். இது தவிர ஸ்த்ரீகளுக்கு ஸபத்நீ மாதாவின் ப்ராதா, பகினீ, புத்ரன், புத்திரி, அவர்களின் பெண், பிள்ளைகளும், பின்னோதர பித்ருவ்யன், பின்னோதர அத்தை, இவர்களுடைய பெண், பிள்ளைகள், ஸபத்நீ மாதாவின், தகப்பன், தாய் ஆகியவர்களின் மரணத்தில் ஒரு நாள் தீட்டு.

பதினாலு தலைமுறைக்குமேல் இருபத்தொரு தலைமுறைவரையில் ஸம்பந்த ஞானமிருந்தால் (தலைமுறை தெரிந்தால்) ஸகோத்ர மரணத்தில் ஒரு நாளா சௌசம். யுத்தத்தில் அடிபட்டு காலாந்தரத்தில் மரித்தவனுக்கு ஒரு நாளா சௌசம். உபாத்யாயன் (வேத, வேதாங்கங்களில் ஏகதேசத்தைச் சொல்லிக் கொடுத்தவன்) ஸுஹ்ருத், ஸ்யாலன், (மைத்துனன்) பூப்ருத் (மண்டலாதிபதியான க்ஷத்ரியன்) இவர்கள் மரணத்தில் ஒரு நாளா சௌசம் உண்டு.

ஸ்வக்ருஹத்தில் அச்ரோத்ரியன் ம்ருதனுனல் அந்த க்ருஹஸ்வாமிக்கு ஒரு நாள் தீட்டு. ஒரு க்ராமத்தில் அச்ரோத்ரியன் ம்ருதனுனல், ஒரு தினம் தீட்டு. அச்ரோத்ரியனுனல் தீட்டு கிடையாது. பந்துக்களுடைய க்ருஹத்தில் ஒருத்தி ப்ரஸவித்தால் ப்ரஸவித்தவளின் மாதுலாதி பந்துக்களுக்கு ஒரு நாளா சௌசம். அநேக பிதாக்களுக்கு ஏக மாதாவினிடத்தில் பிறந்த பிள்ளைகளுக்கு பரஸ்பரம் ஜனனத்தில் ஒரு நாள் தீட்டு.

இந்த த்ரிராத்ர பக்ஷிண்யா சௌசங்கள் உபநயனத்திற்குப் பிந்திய மரணத்தில்தான். உபநயனத்திற்கு முன்பு மரித்தால் ஸ்நான மாத்ரம். ஸ்த்ரீகளுக்கு விவாஹம்தான் உபநயனம்.

12. ஸ்நான மாத்ரம்

ஸகோத்ரமல்லாத இதர பந்து விஷயத்தில் ஸம்பந்தனுன மிருந்தால் ஒரு வயதிற்கு மேற்பட்டு மரித்தால் ஏழு தலைமுறை வரையில் ஸ்நானம் உண்டு. ஐந்து தலைமுறை வரையில்தான் என்பர் சிலர். ஸபிண்ட புருஷ வ்யதிரிக்த விஷயத்தில் ஒரு வயதிற்குள் இறந்தால் ஸ்நானம் கிடையாது. ஷட்டகர், மைத்துனனது மாப்பிள்ளை, தனக்கு யஜமானனின் மாப்பிள்ளை தனக்கு ரித்விக்கின் மாப்பிள்ளை, ஆசாரியனுடையவும் அவன் பிள்ளையினுடையவும் மாப்பிள்ளை, தகப்பனுரின் மாப்பிள்ளை (ஸஹோதரியின் பர்த்தா) தகப்பனுரின் ரித்விக், தகப்பனுரின் யஜமானன் தகப்பனுரின் சிஷ்யன் ஆகியவர்களுடைய மரணத்தில் ஸ்நாந மாத்திரம் உண்டு.

தேசக்ஷோபம், துர்பிக்ஷம் முதலான ஆபத் காலத்தில் அந்த ஆபத்துக்கு நிவர்த்தகமான வைதிக நிரவகாச கர்மங்களில் ஆசௌசியானவனுக்கு ஸ்நான மாத்ரத்தால் சுத்தியும் அதிகாரமுமுண்டு. கோப்ராம்மண

ஸ்த்ரீகளுடைய ரக்ஷணத்திற்காகவும், ராஜ்ய ரக்ஷணத்திற்காகவும், யுத்தத்திற்குச் சென்று அதில் வதம் பண்ணப்பட்டவனுக்கு தத்காலத்திலேயே அபர கர்மாக்களைப் பண்ணலாம். துர்ம்ருதனுக்குப்போல காலாந்தர ப்ரதீக்ஷை வேண்டியதில்லை. ப்ராணத்யாகம் பண்ணியாகிலும் ரக்ஷிக்கவேண்டுமென்கிற இச்சையில்லாதவன் யுத்தத்திற்குச் சென்று அதில் கொல்லப்பட்டால் காலாந்தரத்தில்'தான் ஆசௌசமும் கர்மமும். வேலைக்காரன், வேலைக்காரி, ராஜா, மந்திரி, தச்சன்முதலான சில்பிகள், வைத்யன் ஆகியவர்களுக்கு ஸ்வஸ்வ கார்யத்தில் மாத்திரம் ஆசௌச காலத்தில் சுத்தியுண்டு.

13. ஆச்ரமிகள் விஷயம்

க்ருஹஸ்தனுடைய மரணத்திலும் ப்ரம்மசாரியின் மரணத்திலும், ஸபிண்டனை க்ருஹஸ்தனுக்கு பூர்ண ஆசௌசமுண்டு· வானப்ரஸ்த ஸன்யாஸி மரணத்தில் ஸ்நானமாத்ரத்தாலே சுத்தி. புத்ராதிகளுக்கு மாத்திரம் கர்மாசரண காலத்தில் அசுத்தி உண்டு. ப்ரம்மசாரி மாதா பிதாக்களுக்கு கர்மம் செய்தால் அந்த காலத்தில் மாத்திரம் அசுத்தி உண்டு. ஸ்நானம் செய்தவுடன் சுத்தனுவான்.

14. துர்மரண விஷயம்

புத்திபூர்வக துர்மரணத்தில் அமந்த்ரகமாக தஹன பர்யந்தம்தான் ஆசௌசம். வருஷம் கழித்து ப்ராயச்சித்தம் பண்ணி கர்மம் பண்ணுகிற ஸமயத்தில்தான் ஞாதிகளுக்கு மூன்று நாளாசௌசம். அபுத்தி பூர்வக துர்மரணத்தில் அப்பொழுதே ப்ராயச் சித்த பூர்வமாக சரம க்ரியையும் ஆசௌசமும் அனுஷ்டிக்க வேண்டும்.

விதி பலத்தாலே ஜலம் நெருப்பு மலைகளில் விழுந்து மரணமேற்பட்டால் அவனுக்கு மூன்று நாள் தீட்டு. நபும்ஸகன், பாஷண்டன், பதிதன், தர்ம மல்லாத ஸன்யாஸமுள்ளவன், வ்யர்த்தமாக ஜீவித்திருப்பவன், வ்யபிசாரிணீ, ஆச்ரம மில்லாதவன், திருடன், கருவைச் சிதைத்தவன், தற்கொலை செய்துகொண்டவன் இவர்களுடைய மரணங்களில் அமந்த்ரகமாக ஸம்ஸ்காரம் வரையில் ஆசௌசம். ஸம்வத்ஸராதி காலாந்தரத்தில் மந்த்ர பூர்வமாக ஸம்ஸ்காரம்.

15. வஹன அநுகமன உபசாராதிகளில் அசுத்தி

தத்தனானவன், தன் ஜனகமாதா, பிதாக்களுக்கு கர்த்தாவாயிருந்தாலும், தௌஹித்ரன், தன்னுடைய மாதாமஹன், மாதாமஹிக்கு கர்த்தாவாயிருந்தாலும், ஸமானோதகன் வேறொரு ஸமானோதகனுக்கு கர்த்தாவாயிருந்தாலும், வேறொரு ஸமானோதகனுக்கு வஹனாதிகள் பண்ணினாலும் பத்து நாள் ஆசௌசம் விசேஷமாய் உண்டு. பக்ஷிண்யாசௌசி வஹனாதிகள் பண்ணினால் மூன்று நாள் ஆசௌசம் விசேஷமாய் உண்டு. ஜாத்யந்தரத்திற்கு வஹனாதிகள் பண்ணினால் அந்தந்த ஜாதிக்குண்டான ஆசௌசம் உண்டு. ஒரே ஜாதியில் பிறந்த ஸம்பந்தமில்லாதவன் வஹனாதிகள் பண்ணினால் பஹிர் வாஸத்தில் ஒரு வேளை ஆசௌசம். க்ராம வாஸத்தில் ஒருநாள். ப்ரேத க்ருஹத்தில் வஸித்தால் மூன்று நாள் தீட்டு. அந்த க்ருஹத்தில் போஜனம் செய்தால் பத்து நாள் தீட்டு. அனாதைகளுக்கு வஹனாதிகள் பண்ணினால் அப்பொழுதே ஸ்நான மாத்ரத்தால் சுத்தி. கூலி வாங்கி, வஹனாதிகள் பண்ணினால், ஸஜாதியாக இருந்தால். அந்த ஜாதிக்குள்ள தீட்டு உண்டு. விஜாதீயனாயிருந்

தால் அந்தந்த ஜாதிக்குண்டானதைப் போல் இரண்டு பங்கு தீட்டு உண்டு. தீக்ஷையுள்ளவன் வஹனுதிகள் பண்ணக்கூடாது.

ஸஜாதீய விஷயத்தில் அனுகமனம் பண்ணினுலும், வஹனுதிகள் பண்ணினுலும், ஸ்நானம் பண்ணி நெருப்பைத் தொட்டு நெய்யை சாப்பிட்டு புனஸ்னனம் பண்ணி ப்ராணுயாமங்களால் பிராம்மணர்களுக்கு சுத்தி. நெருப்பு அகப்படாமற் போனுல் பத்து தரம் காயத்ரீ ஜபித்த தீர்த்தத்தை சாப்பிட்டு புனஸ்நானம் பண்ணுவது வழக்கம். ப்ராம்மணுதிகள் சூத்ரனுக்கு அனுகமனம் பண்ணினுல் ப்ராம்மணனுக்கு மூன்று நாள் தீட்டு: க்ஷத்திரிய வைச்யர்கள், சூத்ரனுக்கு அனுகமனம் செய்தால் இரண்டு நாள் தீட்டு. மேலும் மஹாநதியில் ஸ்நானம் பண்ணி ஆயிரத்தெட்டு காயத்ரீ ஜபம் பண்ணவேண்டும். சூத்ரன் ப்ராம்மணுதிகளுக்கு அனுகமனம் பண்ணினுல் ஸ்நான மாத்ரத்தால் சுத்தனுவான். க்ஷத்ரிய வைச்யர்கள் ப்ராம்மணர்களுக்கு அனுகமனம் பண்ணினுல் ஸ்நானம் பண்ணி நெருப்பைத் தொட்டு நெய்யை சாப்பிட்டால் சுத்தராவார்கள். பிராம்மணன் க்ஷத்ரிய, வைச்யர்களுக்கு அனுகமனம் பண்ணினுல் பக்ஷிணி தீட்டுக் காத்து, நதியில் ஸ்நானம் பண்ணி நூற்றெட்டு காயத்ரீ ஜெபம் பண்ணவேண்டும். சூத்ரனுக்குச் சூத்ரன் தொட்டு அனுகமனம் பண்ணினுல்ஒரு நாள் தீட்டு அல்லது ஒருவேளைத் தீட்டு உண்டு.

சூத்ரனுக்கு சூத்ரன் அழுதால் ஸ்நானம் பண்ண வேண்டும். க்ஷத்ரிய வைச்யர்கள் ஸஜாதீய மரணத்தில் ஸஞ்சயனமான பிறகு அழுதால் ஸ்நானம் பண்ணவேண்டும். ஸஞ்சயனத்திற்கு முன்பானுல் உடுத்தவேஷ்டியுடன் ஸ்நானம் உண்டு. ப்ராம்மணன் ஸஞ்சயனத்திற்குப் பிறகு அழுதால் ஆசமனம் பண்ணினுல் போதும். ஸஞ்சயனத்திற்கு முன்பானுல் ஸ்நானம் பண்ண வேண்டும். நிக்ருஷ்டமானவன் உத்க்ருஷ்டவர்ணத்திற்கு

ஸஞ்சயனத்திற்கு முன்பு உபசாரம் சொன்னால் ஸ்நானம் பண்ணவேண்டும். பின்பானால் ஆசமனம் மாத்திரம். உத்க்ருஷ்டமானவன் நிக்ருஷ்ட வர்ணத்திற்கு ஸஞ்சயனத்திற்கு முன்பு உபசாரம் சொன்னால் ஒருநாள் ஆசௌசம். பின்பானால் ஸ்நான மாத்ரம். ஸஞ்சயனத்திற்கு முன் சூத்ரனுக்கு க்ஷத்ரிய வைச்யர்கள் உபசாரம் சொன்னால் இரண்டு நாள் ஆசௌசம். ப்ராம்மணன் உபசாரம் சொன்னால் மூன்று நாள். ஸஞ்சயனத்திற்குப் பிறகு சூத்ரனுக்கு உபசாரம் சொன்னால் எல்லோருக்கும் ஒரு நாள் ஆசௌசம் உண்டு.

16. க்ராமா சௌசம்

க்ராமத்தில் ப்ராம்மண சவம் இருக்கும்போது அதை வெளிப்படுத்தும் வரையில் ஸம்பந்தமில்லாதவர்களும் பாக, ஹோம, தான, பூஜா, போஜனாதிகள் எதையும் செய்யக்கூடாது. நானூறு ப்ராம்மணர்கள் இருக்கக் கூடிய க்ராமமாக விருந்தால் வீதி பேதமிருந்தால் பாதகமில்லை. ஸன்யாஸி சவத்திற்கு தோஷமேயில்லை. ஸ்த்ரீ பால சவத்திற்கும் பாதகமில்லையென்பர் சிலர். ஆரப்தமான வேத பாராயணாதிகளுக்கு பாதகமில்லை. அக்நிஹோத்ரத்திற்கு தோஷமில்லை. ப்ரதிஷ்டா, விவாஹ உபநயனாதிமத்யத்தில் நேர்ந்தால் சவத்தை வெளிப்படுத்தி சேஷத்தைப் பண்ணவேண்டியது.

ஆயிரம் ப்ராம்மணர்கள் உள்ள ஊரில் வீதிபேதமில்லாமல் போனாலும் முப்பது வில் கடைக்குமேல் இருந்தால் தோஷமில்லை. பட்டணத்திற்கு க்ராமத்திற்குள் சவமிருந்தால் வரக்கூடிய தோஷமேயில்லை. சூத்ர சவமிருக்கிற வீட்டுக்கு மாத்திரம் தோஷமுண்டு. க்ராமத்திற்கு தோஷமில்லை.

17. கர்த்தாவின் க்ரமம்

1. ஔரஸபுத்ரன்.
   (1) பலரிருந்தால் மூத்தவன்.
   (2) அனேக பார்யைகளிருந்து எல்லோரும் புத்ரவதிகளாக இருந்தால் வயதில் பெரியவனே மூத்தவன்.
   (3) ஸ்வீகாரம் செய்து கொண்டபின் ஔரஸன் உண்டானுல் அவனே கர்த்தா.
   (4) இரண்டு பார்யைகள் இருந்து மூத்தாளை வைத்துக்கொண்டு ஸ்வீகாரம் செய்து கொண்ட பிறகு இளையாளுக்குப் பிள்ளை பிறந்தால் தகப்பன், இளையாள், மூத்தாள் ஆகியோருக்கு அந்த ஔரஸனே கர்த்தா. ஸ்வீக்ருதன் அல்ல.
2. ஸபத்நீ புத்ரன்.
3. புத்ரி கா புத்ரன்.
   (பெண் ஸந்ததி உள்ளவன் பெண்ணை விவாஹம் செய்து கொடுக்கும்போது இவளுக்குப் பிறக்கும் புத்ரனை தன் புத்ரனுக பாவித்து ஸங்கல்பம் செய்த பிறகு பெண்ணுக்குப் பிறக்கும் தௌஹித்ரன்)
4. ஸ்வீகார புத்ரன்.
5. பௌத்ரன்.
6. ப்ரபௌத்ரன்.
7. தனஹாரீ தௌஹித்ரன்.
8. தௌஹித்ரன். (இதுவரை ஸ்த்ரீபுருஷர் இருவருக்கும்)
9. பத்நீ (பலபேர்களிருந்தால் மூத்தாள்) (பர்த்தாவுக்கு கர்த்தா)
10. பர்த்தா (பத்னிக்குக் கர்த்தா)

11. துஹிதா (ஸ்த்ரீபுருஷாள் இருவருக்கும்)
12. ப்ராதா
13. ப்ராதாவின் பிள்ளை
14. பின்ஜோதர ப்ராதா
15. பின்ஜோதர ப்ராதாவின் பிள்ளை
16. பர்த்தாவின் ப்ராதா
17. பர்த்ருப்ராதாவின் பிள்ளை
18. பிதா
19. மாதா
20. ஸ்நுஷா
21. பௌத்ரீ
22. தௌஹித்ரீ
23. பௌத்ரனுடைய பத்நீ
24. பகினீ (ஸோதரீ, பின்ஜோதரி, தங்கை, தமக்கை)
25. பாகினேயன்
26. ஸபிண்டன்
27. ஸமாநோதகன்
28. மாத்ரு ஸபிண்டன்
29. மாத்ரு ஸமாநோதகன்
30. ஸகோத்ரன்
31. சிஷ்யன்
32. ரித்விக்
33. ப்ருத்யன்
34. குரு
35. ஆசார்யன்
36. ஸஹாத்யாயீ
37. ஜாமாதா
38. ஸகா
39. ஸ்த்ரீஹாரீ
40. ராஜா (தனஹாரீ)

18. ஸம்ஸ்காரம்

ஒரு ஸூத்ரகாரனுக்கு கர்த்தா வேறொரு ஸூத்ர காரனாயிருந்து ஸம்ஸ்காராதிகளைச் செய்கிற விஷயத்தில் இறந்தவனுடைய ஸூத்ரத்தால் தஹனம் பிரதமாப்திகம் வரையில் செய்து ஆப்திகம் முதல் தன்னுடைய ஸூத்ரத் தால் செய்யவேண்டியது. தஹன காலத்தில் அவன் ஸூத்ரம் கிடைக்காவிட்டால் அன்ய ஸூத்ரத்தால் பண்ணலாம். தஹனம் செய்யப்பட்டு பிறகு நடுவில் ஸ்வஸூத்ரம் கிடைத்தாலும், அதனால் செய்யாமல் அன்ய ஸூத்ரத்தாலேயே ஏகோத்திஷ்டம் வரையில் பண்ணவேண்டும். ஸபிண்டீகரணம் ம்ருதனுடைய ஸூத்ரத்தாலேயே பண்ணப் படவேண்டும். ஆனால் யஜுர் வேதிகளுக்கு போதாயன ஸூத்ரத்தால் பண்ணப்பட்டாலும் ஸ்வஸூத்ரத்தால் பண்ணப்பட்டது போலாகும். நடுவில் ஸ்வ ஸூத்ரம் கிடைத்தாலும் அதைக்கொண்டு மேல் க்ரியைகள் நடத்தலாம்.

அன்யனால் ஸம்ஸ்காரம் பண்ணப்பட்ட பிறகு பிள்ளையைத் தவிர்த்த முக்ய கர்த்தா பத்து நாளைக்குள் வந்தால் புனர்தஹனமில்லை. ஸஞ்சயனம் முதல் யாவற்றும் செய்யவேண்டியது. ஸஞ்சயனத்திற்குப் பிறகு வந்தால் பிண்டோதகம் முதலான யாவற்றும் செய்யவேண்டியது.

அன்யனால் தஹனம் செய்யப்பட்ட பிறகு புத்ரன் ஸஞ்சயனத்திற்கு முன் பத்து நாளுக்குள் வந்தால் புனர்தஹனம்; வபனம் முதலிய யாவையும் உண்டு. பத்து நாளோடு தீட்டுப் போகும். பன்னிரண்டாவது நாள் ஸபிண்டீகரணம் பண்ணலாம். ஸஞ்சயனத்திற்குப் பிறகு பத்து நாளுக்குள்ளாவது பத்தாவது நாளிலாவது வந்தால், பிண்டோதகம் முதலானவைகளை பாக்கி நாளில் செய்யவேண்டியது. அந்தந்தக் காலத்தில் பிண்டோதகம் முதலானவற்றைச் செய்து பதினோருவது

நாளில் ஏகோத்திஷ்டம் பண்ணி தீட்டுக் கழிந்த பிறகு ஸபிண்டீகரணம் பண்ண வேண்டும். அன்யனுல் தஹனம் பண்ணப்பட்டு ஸஞ்சயனம் பண்ணப்படாம லிருக்கும்போது பத்தாவது நாள் ராத்ரியிலாவது பதினோருவது நாள் காலையிலாவது புத்ரன் வந்தால் பதினோராவது நாள் காலையில் புனர்தஹனம், வபனம் முதல் யாவற்றையும் செய்து ஏகோத் திஷ்டத்தையும் செய்து கேட்டது முதல் பத்து நாள் தீட்டுக் காத்து உதக தானம் மட்டில் செய்துவந்து தீட்டுப் போனபின் ஸபிண்டீகரணம் பண்ண வேண்டியது. ஸஞ்சயனத் திற்கு பின் பதினோராவது நாளில் புத்ரன் வந்தால், ஸபிண்டனுல் தசாஹ க்ருத்யம் பண்ணப்பட்டிருந்தால் வபனம் செய்துகொண்டு, வ்ருஷோத் ஸர்ஜனம், ஏகோத்திஷ்டம் இவைகளைப் பண்ணி, கேட்டது முதல் பத்து நாள் தீட்டுக் காத்து உதகதானம் செய்து தீட்டுப் போன பிறகு ஸபிண்டீகரணம் பண்ணவேண்டியது.

கனிஷ்டனுல் ஸம்ஸ்காரம் பண்ணப்பட்டு பத்து நாளைக்குள் ஸஞ்சயனத்திற்கு முன் ஜ்யேஷ்டன் வந்தால் வபன ஸஞ்சயனங்களைப் பண்ணி, கடந்த பிண்டோத கங்களை ஒரே தடவையில் பண்ணி பாக்கி நவச் ராத்தாதி களை அந்தந்த காலத்தில் பண்ணி, பதினோருவது நாளில் ஏகோத் திஷ்டத்தைப் பண்ணி பன்னிரண்டாவது நாளில் ஸபிண்டீ கரணத்தைப் பண்ண வேண்டியது.

கனிஷ்டனுல் ஒன்பது நாள் கிரியைகள் பண்ணப் பட்டு பத்தாவது நான் ஜ்யேஷ்டன் வந்தால் கண்டம் வரையில் வபனம் பண்ணிக்கொண்டு ஒன்பது நாள் உதக பிண்டங்களை ஒரே தடவையாய் பண்ணி, பத்தா வது நாள் உதகம், பிண்டம் ப்ரபூதம் முதலியவைகளைப் பண்ணி ஸர்வாங்க வபனத்துடன் சாந்தி ஹோமத்தைப் பண்ணி பதினோருவது நாளில் ஏகோத் திஷ்டத்தைப் பண்ணி கேட்டது முதல் பத்து நாள் தீட்டுக் காத்து பிறகு ஸபிண்டீ கரணத்தைப் பண்ணவேண்டியது.

புத்ரனைத் தவிர வேறு ஸபிண்டன் கர்த்தாவானால் பத்து நாளோடு தீட்டுப் போய்விடும்.

கனிஷ்டன் பண்ணும் விஷயத்தில் பதினோராவது நாள் ஜ்யேஷ்டன் வந்தால், வபனம் பண்ணிக்கொண்டு, வ்ருஷோத்ஸர்ஜனம், ஏகோத் திஷ்டம் இவைகளைச் செய்து கேட்டது முதல் பத்து நாள் தீட்டுக் காத்து உதக தானத்தை மட்டில் பண்ணி தீட்டு போன பிறகு ஸபிண்டீ கரணத்தையும் பண்ண வேண்டியது. கனிஷ்டனாலாவது, அன்யனாலாவது ஸபிண்டீ கரணமும் பண்ணப்பட்ட பிறகு ஜ்யேஷ்டன் வந்தால் வபனம் செய்துகொண்டு கேட்டது முதல்பத்து நாள் உதக தானம் செய்து, பதினோருவது நாளில் புனஸ் ஸபிண்டீகரணத்தைப் பார்வணமாக பண்ணவேண்டியது.

அன்யர்களால் ஸபிண்டீகரணம் முடிய கிரியை பண்ணப்பட்ட விஷயத்தில் ஜ்யேஷ்டன் வராமல் கனிஷ்டன் வந்தாலும் மேலே கண்ட மாதிரி கேட்டது முதல் பத்து நாள் உதகதானம் செய்து பதினோராவது நாளில் புனஸ்ஸபிண்டீகரணம் பார்வணமாகப் பண்ண வேண்டும். (பார்வணம் என்பது நிமித்தபிண்ட ஸம்யோஜனாதிகள் இல்லாமல் செய்யப்படுவது) ஜ்யேஷ்டனால் ஸபிண்டீ கரணம் முடிய பண்ணப்பட்ட பிறகு கனிஷ்டன் வந்தால் பத்து நாள் தீட்டிருந்து உதகதானம் மட்டும் செய்ய வேண்டும் புனஸ்ஸபிண்டீகரணம் கிடையாது. ஸபத்நீ புத்ரனால் கிரியைகள் நடத்தப்பட்ட மாதாவின் விஷயத்தில் ஔரஸ புத்ரனை ஜ்யேஷ்டனாகவும், ஸபத்நீபுத்ரனை கனிஷ்டனாகவும் பாவித்து மேலே சொன்ன நியாயங்களை அவர்கள் விஷயத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது.

துர்மரணமடைந்தவர்களுக்கு க்ருத்யம் காலாந்தரத்தில் ஒரு ப்ராஜாபத்யம், மூன்று தப்தம், ஒரு சாந்த்ராயணம், ஆகிய ப்ராயச்சித்தங்கள் பண்ணி, பண்ணப்பட வேண்டும். உடனே பண்ணுவதானால், மேலே கூறியதைப் போல் ஐந்து மடங்கு ப்ராயச்சித்தங்களைச் செய்து

க்ருத்யம் பண்ணலாம். ஒரு ப்ராஜாபத்யம் என்பது 39 பைசா; ஒரு தப்தம் என்பது மூன்று ப்ராஜாபத்யத்திற்கு ஸமம். அதேபோல் ஒரு சாந்த்ராயணமும் மூன்று ப்ராஜாபத்ய க்ருச்ரத்திற்கு ஸமம். ஆகவே காலாந்தரத்தில் க்ருத்யம் பண்ணுவதானால் பதிமூன்று ப்ராஜாபத்ய க்ருச்ரம் பண்ணவேண்டும். உடனே பண்ணுவதானால் அறுபத்தைந்து க்ருச்ரம் பண்ணி க்ருத்யம் பண்ண வேணும்.

மாதா பிதாக்கள் ஒரே காலத்தில் (தினத்தில் தாஹத்திற்கு முன்) இறந்து போனால் தனித் தனியாக இரண்டு பேரையும் ஒரே சிதையில் தஹனம் பண்ண வேணும். மந்த்ரத்தில் த்விவசனத்தை ஊஹம் பண்ணிச் சொள்ள வேண்டும். ப்ரதக்ஷிணம், உபஸ்தானம், சருகார்யம், சிதி, ஸஞ்சயனம், தர்ப்பணம், கர்த்தம், ஸபிண்டீகரணம், எல்லாவற்றையும் தந்த்ரமாகப் பண்ணவேணும். ஹிரண்ய சகல, நக்னப்ரச்சாதன, வாஸஸ்திலோதக பிண்ட, ஏகோத்தர வ்ருத்தி, நவச்ராத்த, ஸோதகும்ப, வ்ருஷோத்ஸர்க்க ஷோடச ச்ராத்தங்களை ப்ருதக்காகப் பண்ணவேண்டும். சாந்திஹோமம் தந்த்ரம், ஏகோத்திஷ்ட ஸபிண்டீகரணாதிகளில் நிமித்த வரண ஹோமங்கள் ப்ரதக்காகப் பண்ணவேண்டும். மற்ற ஹோமம், பாகம், விச்வேதேவர், விஷ்ணுவெல்லாம் தந்த்ரம். பதி இறந்து தஹனமாகி, அஸ்தி ஸஞ்சயனத்திற்கு முன் பத்நி இறந்தால் முன் அக்நி சாந்த மாகாமலிருந்தால் அதே அக்நியில் (சிதையில்) தஹனம் பண்ணிவிடவேண்டியது. உதக, பிண்ட, தானாதிகளைக் கூடவே பண்ணிவிட வேண்டும். பிதாமஹன் பிதாமஹீ இரண்டு பேரும் ஒரே காலத்தில் இறந்தாலும் இப்படியே பண்ணவேண்டியது.

மாத்ரு, பித்ரு வ்யதிரிக்தர்களுக்கு அனேகருக்கு ஸம்ஸ்காரம் பண்ண நேர்ந்தால், ஸம்பந்த க்ரமமாகப் பண்ணவேண்டும். ஸம்பந்தம் துல்யமாக இருந்தால் ம்ருதக்ரமத்தாலே பண்ணவேண்டும்.

19. ஸஞ்சயனம்

மாதாபிதாவைத் தவிர்த்த மற்றவர்களுக்கு வெள்ளிக் கிழமையில் ஸஞ்சயனம் பண்ணக்கூடாது. ஆனால் தர்சம், ஸங்க்ரமணம், ஆகியவை குறுக்கிட்டு, காலமில்லா விட்டால் மற்றவர்களுக்கும் வெள்ளிக்கிழமை தோஷம் பாராமல் பண்ணி க்ரியையை முடிக்கலாம். இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஏழு, ஒன்பது ஆகிய இந்த நாட்களில் ஒன்றில் சஞ்சயனம் பண்ணலாம். இப்படி அனேக காலங்கள் சொல்லப்பட்டிருந்த போதிலும், அஸ்திக்கு, சண்டாள, ச்வ, ச்ருகாலாதி ஸ்பர்சத்தால் அசுத்தி வரப்போகிறதென்கிற பயத்தால் ப்ராயேண இரண்டாவது நாளே ஸஞ்சயனம் பண்ணுவது வழக்கம்.

20. உதகதானம்

ஆசௌசத்தின் முதல் நாளிலிருந்து உதகதானம் செய்யாமலிருந்தால் அவரவர்களுக்கு ஏற்பட்ட ஆசௌ சத்தின் கடைசி தினத்தில் உதகதானத்தைச் சேர்த்துப் பண்ணவேண்டியது. அதாவது தசராத்ர ஞாதிகள் பத்தாவது தினத்திலும், த்ரிராத்ர ஞாதிகள் மூன்றுவது தினத்திலும், உதகதானத்தைப் பண்ணவேண்டியது. ஆசௌச ஸன்னிபாத (சேர்க்கை) விஷயத்தில் தனித் தனியே ஒவ்வொன்றுக்கும் உதகதானம் பண்ணவேணும். உதகதானம் பண்ணுவதற்கு மறந்து தவறிவிட்டால் மறுநாளில் உதகதானத்தைப் பண்ணி அன்றும் தீட்டு காக்கவேண்டும்.

தசராத்ரத்திற்கு எழுபத்தைந்து திலோதகங்களும், முப்பது வாஸோதகங்களும் உண்டு. திலோதகங்கள் க்ரமமாக முதல் நாள் மூன்று,; இரண்டாம் நாள் நான்கு; மூன்றும் நாள் ஐந்து; நான்காம் நாள் ஆறு; ஐந்தாம் நாள் ஏழு; ஆறும் நாள் எட்டு; ஏழாம் நாள் ஒன்பது;

எட்டாம் நாள் பத்து; ஒன்பதாம் நாள் பதினொன்று; பத்தாம் நாள் பன்னிரண்டு; ஆக மொத்தம் எழுபத்தைந்து. வாஸோதகங்கள் தினம் மூன்றாக பத்து நாளுக்கும் சேர்த்து முப்பது. தசராத்ர அதிக்ராந்த த்ரிராத்ராசௌசத்திற்கு பன்னிரண்டு, முப்பது, முப்பத்து மூன்று என்கிற கணக்கில் எழுபத்தைந்து திலோதகம் மாத்திரம் உண்டு. வாஸோதகம் கிடையாது. தசராத்ர ஞாதிகளுக்குமட்டும்தான் வாஸோதகம் உண்டு. அதுவும் கர்த்தா பண்ணுமிடத்திலேயே உதகதானம் பண்ணுவதானால் மட்டுமே வாஸோதகம் உண்டு. வேறு இடத்தில் செய்தால் தசராத்ர ஞாதிகளுக்கும் வாஸோதகம் தேவையில்லை. ஸமானோதக த்ரிராத்ரத்திற்கு முப்பது திலோதகம் (தினம் பத்து வீதம்) மாத்திரம் உண்டு. வாஸோதகமில்லை. பித்ருமரண சௌச மத்தியில் ஞாத்யா சௌசம் வந்தால் பித்ருக்களுக்கு உதகதானம் முடித்த பிறகு சாந்தி ஹோமத்திற்கு முன் ம்ருத ஞாதியை உத்தேசித்து உதகதானம்பண்ணி விடவேணும். ஞாதி மரணத்தில் ஜீவத்பித்ருகர்கள் உதகதானம் செய்ய வேண்டியதில்லை. ஞாதி மரணத்திலிருந்து பத்து நாளுக்குள் பித்ரு மரணம் நேர்ந்தால் ஞாதியை உத்தேசித்து உதகதானம் பிதாவின் பத்து நாள் உதகதானத்திற்குப் பிறகு செய்யவேண்டும்.

21. வஸ்து நாசத்தில்

க்ருத்யம் பண்ணிக் கொண்டிருக்கும்போது வாஸோதகத்திற்கு வைத்திருக்கும் வஸ்த்ரம், பிண்டம் பொங்கும் பாத்திரம், கையில் வைத்திருக்கும் செம்பு இவைகள் காணாமல் போனால், கடந்த திலோதகங்களை மறுபடியும் பண்ணவேண்டியது. நட்ட பாஷாணம் காணாமல் போனால், புதிதாக பாஷாண ஸ்தாபனம் பண்ணி கடந்த பிண்டோதகங்களை மறுபடி பண்ணவேணும்.

22. பித்ரு தீட்டு மத்தியில் மாத்ரு மரணம்

பிதாவின் தசாஹ மத்தியில் மாதாவின் மரணமேற் பட்டால் பிதாவின் தசம தினத்திலேயே மாதாவுக்கும் உதக பிண்ட ஸமாபனம் பண்ண வேண்டியது. ஸமாபனம் என்பது, உதகதானம், பிண்டதானம், ஏகோத்தர வ்ருத்தி ச்ராத்தங்கள். இவைகளை மட்டுமே ஆகர்ஷித்து முடிப்பதாம். நவச்ராத்தங்களை ஆகர் ஷிக்கக் கூடாது. அவைகளை ஸ்வகாலங்களிலோ, பதினோராவது நாளிலோ பண்ணவேண்டியது.

23. தசாஹ மத்தியில் தர்ச ஸங்க்ரமணங்கள்

தாய், தகப்பன் தவிர மற்றவர்களுக்கு, உதகதானம் பண்ண ஆரம்பித்து தசாஹ மத்யத்தில் தர்சஸங்க்ரம ணங்கள் வந்தால் அதற்கு முந்தியே உதகதானங்களை முடிக்கவேண்டியது. ஞாதிகளும் உதகதானத்தை முடித்து விடவேணும். தர்ச ஸங்க்ரமணத்திற்குப் பிறகு க்ருதயம் ஆரம்பிப்பதானால் கிரமப்படி பண்ண வேண்டியது. தர்ச ஸங்க்ரமணங்கள் இரண்டு நடுவில் வந்தால் தர்சத்திலேயே க்ரியையை ஸமாப்தி பண்ண வேணும். ஸங்க்ரமணம் மாத்திரம் நடுவில் வந்தால் அதில் க்ரியையை ஸமாப்திபண்ணவேண்டியது.

24. ப்ரபூதம்

ப்ரபூத பலிப்ரதானம், பாஷாணோத்தாபனம், இவைகள் பத்தாவது தினத்திலேயே பண்ணப்பட வேணும். பத்து நாளுக்கு நடுவில் தர்ச ஸங்க்ரமணம் வந்து அதனால் முன்னாடி ஆரம்பித்த திலோதகாதிகளை

தர்ச ஸங்க்ரமணத்திலே முடித்தாலும், தர்ச ஸங்க்ர மணத்திற்கு பிறகு ஆரம்பித்து பத்தாவது நாளில் முடித்தாலும், ப்ரபூதம், பாஷாணோத்தாபனம் ஆகிய வற்றை பத்தாவது நாளில்தான் பண்ண வேண்டும்.

25. வபனம்

மரணா சௌசத்தில் ஜீவபித்ருகனுக்கு வபனம் கிடை யாது. வயதில் தனக்குப் பெரியவர்களான தசராத்ர ஞாதிகளின் மரணத்திலும், மாதாமஹன், மாதாமஹீ, மாதுலன், மாதுலானீ, மாமனார், மாமியார், பித்ருபகினீ, மாத்ரு பகினீ, ஸீமந்தஜா பகினீ, ஜனக மாதா, ஜனக பிதா, இவர்களின் மரணத்திலும், ஜீவ பித்ருகேதரர்கள் (தகப்பனையிழந்தவர்கள்) வபனம் பண்ணிக் கொள்ள வேண்டும். மாமனார் மாமியார்களுக்கு ஒரு நாள் தீட்டு வரும் போது வபனம் கிடையாது. வயதில் பெரியவர் களா இல்லையா என்று ஸந்தேஹம் வந்தால் வபனம் பண்ணிக் கொள்வதே உசிதம்.

வயதில் சிறியவர்களான பித்ருவ்யன், மாதுலன், மாதுலானீ, மாமனார், மாமியார், பித்ருபகினீ, மாத்ரு பகினீ, ஸபத்நீமாதா, பித்ருவ்ய பத்நீ, ஜ்யேஷ்ட ப்ராத்ரு பத்நீ, இவர்களுக்கு க்ருத்யம் பண்ணால் வபனம் உண்டு. இல்லாத பக்ஷத்தில் கிடையாது. மேலே சொல்லப்பட்ட வர்களில் உபநயனம் ஆகாதவர்கள். விஷயத்தில் கர்த்தா வுக்கும் வபனமில்லை. மேலே கண்டவர்களுக்கு வேறு கர்த்தா இருக்க ஏதோ காரண வசத்தால் தஹனம் மட்டும் பண்ணும்படி நேர்ந்தால் தஹனாங்க வபனம் கிடையாது.

த்ரிராத்ர ஞாதிகளின் மரணத்தில் வபன நியமம் கிடையாது. க்ருத்யம் பண்ணால் மரித்தவர்கள் மூத்தவர் களாயிருந்தால் மட்டும் வபனம் உண்டு. அதிக்ராந்தா சௌசத் திலும் வபன நியமமில்லை. தீக்ஷாமத்யத்தில் வபன [illegible] உள்ள ஞாத்யாதி மரணத்தில் வபன நியம

மில்லே. ஆனுல் மாதா, பிதா, மரணம் நேர்ந்தாலும், மாதா மஹாதிகளுக்கு க்ருத்யம் பண்ணும்படி நேர்ந்தாலும் வபனம் பண்ணிக் கொள்ளவேண்டும். மாதா இறந்து பத்து நாளேக்குள் பிதா இறந்தால் கர்த்தாவுக்கு தஹனங்க வபனமில்லே. ஆனுல் தகப்பன் இறந்து பத்து நாளேக்குள் தாயார் இறந்தால் வபனமுண்டு.

விஹிதகாலம் தவிர மற்ற காலங்களில் தகப்பனும் பிள்ளேயும், ஒரே வயிற்றில் பிறந்த ப்ராதாக்களும் ஒரே நாளில் வபனம் பண்ணிக் கொள்ளக்கூடாது. மாதா, பிதாக்களுக்கு க்ருத்யம் பண்ணும் புத்ரர்களே த்தவிர மற்ற எவரும் எக்காரணத்தாலும் ராத்ரியில் வபனம் பண்ணிக் கொள்ளக்கூடாது. புத்ரனேத் தவிர மற்றவர்கள் க்ருத்யம் பண்ணும் பக்ஷத்தில் ராத்ரியிலாவது, வெள்ளிக்கிழமையிலாவது தஹனம் ஏற்பட்டால் தஹனங்க வபனத்தை மறு நாள் செய்து கொள்ளவேணும். அபரவிஷயங்களில் வெள்ளிக் கிழமையில் ஞாதிகள் வபனம் பண்ணிக் கொள்ளவேகூடாது. ஆனுல் மாதா பிதாக்கள் விஷயத்தில் இந்த நிஷேதமில்லே. தசம தினமாவது, வபனப் ரஸக்தியுள்ள மூன்ருவது தினமாவது வெள்ளிக்கிழமையாக விருந்தால், அதற்கு முதல் நாளிலேயே ஞாதிகள் வபனம் பண்ணிக் கொள்ள வேண்டியது. அப்படியின்றி அன்றைய தினம் தான் கேள்விப்பட்டு க்ஷௌர நிஷேதமில்லாமலிருந்தால் மறு நாள் பண்ணிக் கொள்ளலாம். அப்படி இல்லாவிட்டால் க்ஷௌரம் கிடையாது. அன்று பகலில் கேள்விப்பட்டால் உதக தானத்தை அன்றே பண்ணிவிடலாம். வபன ப்ரஸக்தியுள்ள தீட்டை வபனம் செய்து கொள்ளவேண்டிய தினத்தில் சாப்பிட்ட பிறகு கேள்விப்பட்டால் வபனம் பண்ணிக் கொள்கிற வழக்கமில்லே. உதக தானம் மாத்திரம் செய்யவேணும். அன்று ராத்ரியில் கேள்விப்பட்டால் உதக தானத்தை மறுநாள் பண்ணவேணும். பண்ணவேண்டாமென்கிற பக்ஷமுமுண்டு.

உதகதான ப்ரஸக்தியில்லாமல் வபனம் மட்டுமுள்ள மூன்று நாள் தீட்டை மூன்றுவது நாளான வெள்ளிக் கிழமையிலோ அல்லது ராத்ரியிலோ கேட்டால் மறுநாள் வபனம் கிடையாது. ஸ்நானம் செய்தால் தீட்டுப் போகும். மாதா, பிதாக்களின் மரண விஷயமான ஆசௌசத்தில் வபன ப்ரஸக்தியுள்ள மாதா மஹாதி மரணம் நேர்ந்தால் வபனம் கிடையாது. ஆனால் கர்த்தா வாக இருந்தால் தஹனங்க வபனம், உதகதானம் முதலியவையுண்டு. பன்னிரண்டாவது நாளில் ஸபிண்டீ கரணம் பண்ணுவிட்டால் பிறகு த்ரிபக்ஷாதிகளில் ஸபிண்டீகரணம் பண்ணினால் ஸபிண்டீகரணத் தன்று வபனம் பண்ணிக்கொண்டு தான் செய்யவேணும்.

26. தீக்ஷையும் வபனமும்

தீக்ஷை என்பதால் கர்ப்ப தீக்ஷை, விவாஹ தீக்ஷை, உபநயன தீக்ஷை, மாத்ரு தீக்ஷை, பித்ரு தீக்ஷை ஆகிய ஐந்துகள் சொல்லப்படுகின்றன. கர்ப்பதீக்ஷை யென்பது பத்னீ கர்ப்பமான போது நாலாவது மாஸம் முதல் ஆரம்பித்து ஒன்பது நாள் வரை அனுஷ்டிக்க வேண்டியது. பத்தாவது நாளன்று வபனம் பண்ணிக் கொள்ளவேண்டும். பதினோராவது நாள் தீட்டுப் போகும். விவாஹ, உபநயன தீக்ஷைகள், விவாஹம், உபநயனம் ஆகியவை நடந்த பிறகு ஒரு வருஷம் அல்லது ஆறு மாதம் அனுஷ்டிக்க வேண்டியவை. பிறகு நாள் பார்த்து வபனம் பண்ணிக் கொள்ளவேண்டும். மாத்ரு, பித்ரு, தீக்ஷைகள் மாதா பிதாக்களின் மரணத் திற்குப் பின் தசாஹ க்ஷௌரத்திற்குப் பிறகு ஒரு வருஷம் அனுஷ்டிப்பது.

கர்ப்ப விவாஹ உபநயன தீக்ஷைகளின் நடுவில் மாதா பிதாக்களின் மரணம் நேர்ந்தாலும், மாதாமஹன்,

மாதாமஹீ, பித்ருவ்யன், அவன் பத்நீ, அம்மான், அம்மாமி, ஜ்யேஷ்ட ப்ராதா, அவன் பத்நீ, அத்தை, மாத்ரு ஸஹோதரீ, பகினீ, மாமனூர், மாமியார் இவர்கள் மரணத்தில், கர்த்ருத்வ முண்டானாலும், வபனமுண்டு. மாதா, பித்ரு தீக்ஷையில், பத்நீ ப்ரஸவித்தால், வபன முண்டு. ஒருவனுக்கு இரண்டு பத்நீகள் அல்லது அநேக பத்நீகள் கர்ப்பமாயிருந்தால் அந்த கர்ப்ப தீக்ஷையை ஜ்யேஷ்ட பத்நீயின் ப்ரஸவத்தை யனுஸரித்து நிவ்ருத்தி செய்து கொள்ளவேண்டும்.

தீக்ஷா மத்யத்தில் வபன ப்ரஸக்தியுள்ள ஞாத்யாதி மரணத்தில் வபனமில்லை. மாத்ரு பித்ரு தீக்ஷையில் மாதா மஹாதிகளுக்கு க்ருத்யம் பண்ண நேர்ந்தாலும், வபனம் கிடையாது. ஆனால் மாதா பிதாக்கள் மரணம் நேர்ந்தால் வபனமுண்டு. கர்ப்ப தீக்ஷை யுள்ளவனுக்கு ஸபிண்டீகரண நிமித்த வபனமில்லை. ஸபிண்டீ கரணத் திற்குப் பிறகு தீக்ஷை ஆவச்யகமில்லை. அனுஷ்டிப்பது ச்லாக்யம். இல்லாவிட்டாலும் தோஷமில்லை. மாதா பித்ரு ஸபிண்டீ கரணத்திற்கு முன் மாத்ரு வ்யதிரிக்த வேறு க்ருத்யம் செய்தால் வபனம் இல்லை. பின் செய்தால் தீக்ஷையை ஆசரித்தால் வபனமில்லை. இல்லாவிடில் உண்டு.

தீக்ஷையுடையவன் ஸமுத்ர ஸ்நானம் பண்ணக் கூடாது. தாயார் தகப்பனார் தவிர மற்ற பிணத்தை சுமக்கலாகாது. மாதா கர்ப்பிணியாகி ஐந்து மாஸத் திற்கு மேல் பிள்ளைகளுக்கு உபநயனமும், பெண்களுக்கு விவாஹமும் பண்ணக்கூடாது.

27. ஆசௌச ஸன்னிபாதத்தில்

(தீட்டுச் சேர்க்கையில்—வபனமும் உதகதானமும்)

ஆசௌச ஸன்னிபாதத்தில் அனேக ஆசௌசங்களுக்கும் வபனம் ஒன்று தான். வபனம் அல்லது உதக தானமுள்ள மூன்று நாள் தீட்டு மத்தியில் மூன்று அல்லது பத்து நாளுள்ள ஜனனாசௌசம் வந்தாலும், பின் சொன்னதில் முன்னது வந்தாலும் மரணாசௌசம் ப்ரபலமானதால் மரணாசௌசத்தின் மூன்றாவது தினத்தில் வபனத்தையோ, உதக தானத்தையோ பண்ண வேண்டியது. மேலே சொன்ன மரணாசௌச மத்யத்தில் மாதா பிதா இறந்தாலும் பின் சொல்லியதில் முன் சொல்லியது நேர்ந்தாலும், மூன்று நாள் தீட்டுக்கு வபனமில்லை. தாயார் தகப்பனாரின் உதக தானத்தை முடித்த பிறகு மூன்று நாள் தீட்டுக்கு உதக தானம் பண்ண வேணும். தாயார் தகப்பனார் மரணாசௌச மத்தியில் பத்நீ, பிள்ளை, பெண், ஆகியவர்கள் இறந்தாலும், பின் சொல்லியதில் முன் சொல்லியது நேர்ந்தாலும், கர்த்தா பிள்ளையானாலும், வேறு இருந்தாலும், தாயார் தகப்பனாருக்காக அன்றி மற்றவர்க்காக வபனம் கிடையாது. உதகதானத்தை மட்டும் மேலே சொல்லியபடி பண்ண வேண்டியது.

வபனமுள்ள அல்லது உதக தானமுள்ள மூன்று அல்லது பத்து நாளுள்ள தீட்டு நடுவில் தனக்கே சிசு பிறந்தாலும், பின் சொல்லியதில் முன் சொல்லியது நேர்ந்தாலும், கர்ப்ப தீக்ஷையும், பிறப்புத் தீட்டும் ப்ரபலமானதால் வேறு தீட்டுக்கு வபனமில்லை. மூன்று நாள், பத்து நாள் தீட்டுகள் தன் குழந்தை பிறந்த பத்தாவது நாளில் போவதாயிருந்தால் பத்தாவது நாளில் உதகதானம் மட்டும் பண்ணிவிட்டு பிறகு கர்ப்ப தீக்ஷா நிவ்ருத்தி பண்ணிக்கொள்ள வேண்டியது.

வபனமும், உதகதானமுள்ள பத்து நாள் ஞாதி தீட்டு நடுவில், மாதா, பிதா ஆகியவர்கள் இறந்தாலும், பின் சொல்லியதில் முன் சொல்லியது நேர்ந்தாலும், மேற்படி ஞாதி மரணத்திற்காக வபனம் கிடையாது. உதகதானம் மட்டும் அந்தந்த தீட்டின் பத்தாவது நாளிலாவது, மாதா பிதா தீட்டோடு போவதாயிருந்தால் அந்த பத்தாவது நாளிலாவது சாந்தி ஹோமத்திற்கு முன் தனியாய்ச் செய்ய வேண்டியது.

வபனமுள்ள மூன்று நாள் தீட்டு மத்தியில் உதக தானமுள்ள மூன்று நாள் தீட்டு வந்தாலும், பின் சொல்லியதில் முன் சொல்லியது வந்தாலும், இரண்டு தீட்டுக்களும் ஒன்ருகப் போய் விடுமாதலால் வபனமுள்ள ஆசௌசத்திற்கு முதலில் வபனம் பண்ணிக்கொண்டு உதகதானம் உள்ள ஆசௌசத்திற்கு உதகதானம் பண்ண வேண்டியது. வபனமுள்ள மூன்று நாள் தீட்டுடன் அதே விதமான தீட்டு சேர்ந்தாலும். உதக தானமுள்ள மூன்று நாள் தீட்டுடன் அதே விதமான தீட்டு சேர்ந்தாலும் இரண்டு தீட்டுகளும் ஒன்ருய்ப் போய் விடுமாதலால் வபனம் ஒன்று தான். உதகதானம் மட்டும் தனித்தனியே பண்ண வேண்டியது.

வபனமுள்ள மூன்று நாள் தீட்டு நடுவில் வபன மில்லாத அல்லது வபனமுள்ள பத்து நாள் தீட்டு வந்தாலும், பின் சொல்லியதில் முன் சொல்லியது வந்தாலும், பத்து நாள் தீட்டு ப்ரபலமானதால் மூன்று நாள் தீட்டிற்கு வபனமில்லை. வபன ப்ரஸக்தியுள்ள இரண்டு பத்து நாள் தீட்டு சேர்ந்தால் இரண்டிற்கும் ஒரே வபனம்தான். வபனப்ரஸக்தி யுள்ளதும், இல்லா தது மான இரண்டு பத்து நாள் தீட்டுகள் சேர்ந்தால் முந்திய தீட்டின் பத்தாவது நாளில் வபனம் பண்ணிக் கொண்டு மறுநாள் தீட்டைக் கழிக்கவேணும். எந்த தீட்டைக் கழிப்பதானுலும் காலை 6 நாழிகைக்கு மேல் ஸ்நானம் செய்து கழிக்க வேண்டும். அன்று வெள்ளிக்

கிழமையானால் அதற்கு முதல் நாள் வபனம் பண்ணிக் கொள்ள வேணும்.

உதகதானமுள்ள மூன்று நாள் தீட்டு, நடுவில், பத்து நாள் தீட்டு வந்தாலும், பின் சொல்லியதில் முன் சொல்லியது வந்தாலும், மூன்று நாள் தீட்டு முன்னதானால் மூன்ருவது நாளிலும், பத்து நாள் தீட்டிற்கு பத்தாவது நாளிலும் உதகதானம் தனித் தனியாய் பண்ணவேண்டியது. பத்து நாள் தீட்டின் ஒன்பதாவது நாளிலேயோ, பத்தாவது நாளிலேயோ, உதகதானமுள்ள ஒரு மூன்று நாள் தீட்டு வந்தால், பத்து நாள் தீட்டின் பத்தாவது நாளில் இரண்டு தீட்டுகளின் உதகதானங்களைத் தனித்தனியே க்ரமமாக பண்ணவேண்டியது. உதகதான ப்ரஸக்தியுள்ள பத்து நாள் தீட்டு இரண்டு சேர்ந்தால் தனித்தனியாய் உதக தானம் பண்ண வேண்டியது.

28. ஏகோத்திஷ்டம்

பிறந்த தினம் முதல் பதினொருவது நாளில் ஏகோத்திஷ்டத்தைப் பண்ணவேண்டியது. நிமந்த்ரண மனுஷ்யாலாபாதிகளால் விக்னம் ஏற்பட்டால் மனுஷ்யாள் அகப்படும் வரை ப்ரதிதினம், பிண்டம் போட்டு இருபத் தெட்டாவது நாள் ஊனத்திற்கு முன்பு என்றைக்கு மனுஷ்யாள் அகப்படுகிருர்களோ அன்று ஏகோத் திஷ்டம் பண்ணவேணும். த்ரிபக்ஷத்தில் ஸபிண்டீ கரணம் பண்ணவேண்டியது.

பதினொருவது நாளில் ஏகோத்திஷ்டம் பண்ணப் படாமலிருந்து ஸஞ்சயனமுமாகாமலிருந்தால் புனர் தஹனம் முதல் பிண்டோ தகதானம் முதலிய யாவற்றையும் க்ரமமாகச் செய்து ஏகோத்திஷ்டத்தைப் பண்ண வேண்டியது. ஸஞ்சயனம் ஆகியிருந்தால்

பிண்டோதக தானம் முதலிய யாவற்றையும் செய்து ஏகோத்திஷ்டத்தைப் பண்ண வேண்டும். ஏகோத்திஷ்டத்தை ஸபிண்டீ கரணத்திற்கு பிறகு பண்ணக் கூடாது.

29. ஸபிண்டீ கரணம்

மரண தினம் முதல் பன்னிரண்டாவது நாளில் முக்ய கர்த்தா ஸபிண்டீ கரணத்தைப் பண்ண வேண்டியது. மாதா பிதாக்கள் தவிர மற்றவர்கள் விஷயத்தில் பன்னிரண்டாவது நாள் வெள்ளிக்கிழமை யானால் மறுநாள் பண்ண வேண்டியது. பன்னிரண்டாவது நாளில் பண்ணமுடியாத பக்ஷத்தில், பன்னிரண்டு முதல், பதினேழு நாள் வரையில் பூர்வ பூர்வாவஸம்பவே உத்தரோத்தர தினத்தில் பண்ணலாம். அதில்லாவிடில் இருபத்திமூன்ருவது நாளிலோ, த்ரிபக்ஷத்திலோ, மூன்று, நான்கு, ஆறு, பதினொன்று ஆகிய மாதங்களிலோ, வத்ஸராந்தத்திலோ, நாள் பார்த்துப் பண்ண வேண்டியது. மாதா பிதாக்கள் விஷயத்தில் பன்னிரண்டு முதல் பதினேழு நாள் வரையில் ஸபிண்டீ கரணம் பண்ண நாள் பார்க்க வேண்டியதில்லை. கர்த்தாவினுடைய ஜன்ம நக்ஷத்ரம், த்ரிபுஷ்கராதி, வெள்ளிக்கிழமை சதுர்த்தசீ இவைகளில் ஸபிண்டீ கரணம் பண்ணக்கூடாது. ஆப்திகத்திற்கு முதல் நாளில் பண்ணுவதானால் நாள் பார்க்க வேண்டியதில்லை.

பன்னிரண்டு வயது முடியாத ப்ரம்மசாரிக்கு ஸபிண்டீகரணமில்லை. நாராயணபலி மட்டும் உண்டு. ஆப்திக ப்ரத் யாப்திகங்கள் கிடையாது. அனுபநீதன், அனூடா, இவர்களுக்கு பன்னிரண்டு வயதிற்கு மேல் ஸபிண்டீகரணாதிகள் அமந்த்ரகமாக உண்டு. விவாஹமானவர்களுக்கு எவ்வளவு வயதாயிருந்தாலும் ஸபிண்டீ கரணாதிகள் உண்டு.

ஒருவனுக்கு அனேக பார்யைகள் இருந்தால் மூத்தவளே ஸபிண்டீகரணத்தைப் பண்ணவேண்டியது. அனேக பிள்ளைகளிலிருந்தால் மூத்தவனே பண்ண வேண்டியது. மாதா பிதாக்களுக்கு ஸபிண்டீகரண ஹோமத்தை ஔபாஸனுக்நியில் பண்ணவேண்டியது அவச்யகம். அனேகம் பிள்ளைகளிலிருந்து மூத்தவன் அக்னிமானுக இல்லாதவனுயிருந்தால், அவனுக்கடுத்த அக்னிமான் பண்ணவேணும். மூத்தவனுக்கு பத்நீ அநுகூலையாக இல்லாமல் ப்ரதிகூலையாயிருந்தால் வருஷ முடிவு வரையில் ப்ரதீக்ஷித்து, அப்போதும் ப்ரதி கூலையாக இருந்தால் பத்நிக்குப் ப்ரதி நிதி (கூர்ச்சாதி) பண்ணிக்கொண்டு ஸபிண்டீ கரணத்தைப் பண்ண வேண்டியது. கர்த்தா அக்நிமானுக இல்லாவிட்டால் தன்னுடைய அக்நியில் (லௌகிகாக்நி) பண்ண வேண்டியது. ஸபிண்டீகரணத்தை ஔபாஸனுக்னியில் பண்ண வேண்டும். அந்த அக்னி விச்சின்னமாக இருந்து பத்னி ரஜஸ்வலையாயிருந்தால் ஐந்தாவது நாள் அவள் சுத்தியான பிறகு அக்னி ஸந்தானம் பண்ணிக் கொண்டு ஸபிண்டீகரணம் பண்ணவேண்டும்.

மூன்று நாளா சௌசமுள்ள ஸமானோதகன், புத்ரீ புத்ரன், தத்தனுய்ப் போனவன், இவர்கள் கர்த்தா வானல் பத்து நாளா சௌசம் அனுஷ்த்து பன்னிரண் டாவது நாளில் ஸபிண்டீகரணம் பண்ணவேணும்; பக்ஷிண்யா சௌசிகள் கர்த்தாவானுல் மூன்று நாள் ஆசௌசம் மனுஷ்டித்து, நாலாவது நாளில் ஏகோத் திஷ்டத்தையும், ஐந்தாவது நாளில் ஸபிண்டீகரணத் தையும் பண்ணலாம். பந்துக்கள் கர்த்தாவானுல் மூன்றாவது நாளில் ஏகோத்திஷ்டத்தையும், நான்காவது நாளில் ஸபிண்டீகரணத்தையும் பண்ணலாம்.

பிதாவின் தசாஹ மத்யத்தில் மாதா இறந்தால் மாதாவின் ஸபிண்டீகரணத்தை கிரமமாக 12வது நாளில் பண்ணி பிதாவின் ஸபிண்டீகரணத்தை த்ரி

பக்ஷாதி காலத்தில் பண்ணவேண்டியது. மாதாவின் தசாஹ மத்தியில், பிதா இறந்தால் பிதாவின் ஸபிண்டீ கரணத்தை பிதா மரித்த 12வது நாள் பண்ணி மாதா வின் ஸபிண்டீகரணத்தை த்ரிபக்ஷாதி காலத்தில் பண்ண வேண்டியது. மாதா பிதாக்கள் இறந்த வருஷத்தில் வேறொருவருக்கும் ஸபிண்டீகரணம் பண்ணக் கூடாது. ஆனால் பத்நீ, புத்ரன், பௌத்ரன், ப்ராதா, ப்ராத்ரு புத்ரன், நாட்டுப்பெண், ஸஹோதரீ இந்த ஏழு பேர்க ளும், மாதாபிதாக்களின் ஸபிண்டீகரணத்திற்குமுன் இறந்தால் த்ரிபக்ஷாதி காலத்திலும், பிறகு இறந்தால் அதனதன் பன்னிரண்டாவது நாளிலும், ஸபிண்டீ கரணத்தைப் பண்ண வேண்டியது. விஷ்ணு வரண மில்லாமல் ஸபிண்டீகரணத்தைப் பண்ணவே கூடாது.

புத்ரன், பௌத்ரன், ப்ராதா, பத்நீ, சிஷ்யன் தௌஹித்ரன், இவர்கள் கர்த்தாக்களானால் ஸபிண்டீ கரணத்திற்குப் பிறகும் எல்லா க்ரியைகளையும் பண்ண வேணும். மற்றவர்கள் ஸொத்து அடையாமலிருந்தால் ஸபிண்டீகரணத்தைப் பண்ணி, மேல் க்ரியைகளை விட்டு விடலாம். ஸொத்தை அடைந்தால் அவற்றையும் பண்ண வேணும்.

ஸபிண்டீகரணம் த்ரிபக்ஷாதிகளில் பண்ணும்படி நேரிட்டால் ததங்கமாக வபனம் உண்டு.

30. ஸோதகும்பம்

மரண தினம் முதல் பன்னிரண்டாவது, நாளில் ஆரம்பித்து ஆப்திகம் வரையில், மாஸிக, ஊனமாஸிக தினங்கள் தவிர ப்ரதி தினமும், ஸோதகும்ப ச்ராத்தம் பண்ண வேண்டியது. அதற்கு முடியாவிட்டால் மாஸிக தினத்திற்கு முன் தினத்தில் பண்ண வேண்டியது. ப்ரதி தினம் பண்ணும் பக்ஷத்தில் காரண வசத்தால்

நின்றுபோன ஸோத கும்பத்தை மறுநாள் சேர்த்துப் பண்ண வேண்டியது. மாஸத்திற்கு ஒரு தடவை பண்ணுவதானால், நின்று போனால் அதற்கு வேறு கால [illegible]. ஸபிண்டிகரணத்திற்கு முன்பு பண்ணப்படும் ஸோத கும்பத்தில் ஏகோத்திஷ்டமாக (ப்ரேத வரணமாக) வரணம் பண்ண வேணும்.

31. ஊன மாஸிகம்

ஊனங்கள் நான்காகும். ஊன மாஸிகங்களை நாள் பார்த்து விஹித காலத்தில் பண்ண வேண்டியது. இருபத்தேழாவது நாளுக்குமேல் முப்பது நாளுக்குள்ளும், நாற்பதுக்குமேல் நாற்பத்தொன்று, நாற்பத்து இரண்டு, நாற்பத்தைந்து ஆகியவைகளில் ஒரு நாளிலும், [illegible] எழுபது நாளுக்குமேல் நூற்று எண்பது நாளுக்குள்ளும், முன்னூற்று நாற்பதாவது நாளுக்குமேல் முன்னூற்றைம்பத்தைந்து நாளுக்குள்ளும் ஊன மாஸிகங்களைப் பண்ண வேண்டியது. அந்தந்த காலங்களில் பண்ணத் தவறினால் வேறுகாலம் கிடையாது. த்ரிபக்ஷத்தில் பண்ணும் ஊனத்தை, ஏகாதசி வ்ரத தினம், வெள்ளிக்கிழமை ஆகியவை இல்லாமலிருக்கும் 41, 43, 45 தினங்களுக்குள், ஏதாவதொரு நாளில் பண்ணவும். த்ரைபக்ஷிகத்தைத் தவிர்த்த மற்ற ஊனங்களை வெள்ளிக்கிழமை, நந்தை (ப்ரதமை), ஷஷ்டி, ஏகாதசீ, சதுர்த்தசீ, ஸினீவாலீ (சதுர்தசியோடு கூடிய அமாவாஸ்யை) அமாவாஸ்யை, க்ருத்திகா, ஆயில்யம், பூரம், கேட்டை, மூலம், பூராடம், பூரட்டாதி, த்ரிபுஷ்கரம், த்விபுஷ்கரம், ஏகாதசியாதி வ்ரத தினம், ஆகியவைகளில் பண்ணக் கூடாது. த்விதீயா, ஸப்தமீ, த்வாதசீ, என்கிற மூன்று திதிகள், ஞாயிறு செவ்வாய், சனி ஆகிய மூன்று வாரங்கள்; க்ருத்திகா, புனர்வஸு, உத்தரம், விசாகா,

உத்தராடம், பூரட்டாதி என்கிற த்ரிபாத நக்ஷத்ரங்கள் ஆகியவைகளில் மூன்று சேர்ந்தால் த்ரிபுஷ்கரம் எனப் படும். இரண்டு சேர்ந்தால் த்விபுஷ்கரம் எனப்படும்.

தோஷ மற்ற காலம் கிடைக்காவிட்டால் அந்தந்த காலங்களின் கடைசீ தினத்தில் பண்ண வேண்டியது. ஊன மாஸிகங்களை நாள் கணக்கின் பேரில் பண்ண வேண்டுமே தவிர மாஸிகத்திற்கு முன் அல்லது பின் என்ற நியமம் கிடையாது. மேலும் அவைகளுக்கு மலமாஸாதி தோஷங்கள் கிடையாது.

32. மாஸிகம்

மாஸிகத்தை மாஸந்தோறும் இறந்த திதியில் பண்ண வேண்டியது. ஒரு மாஸத்தில் திதியே இல்லா விட்டால் முந்திய மாஸத்தின் திதியில் சேர்த்துப் பண்ண வேணும். பன்னிரண்டாவது மாஸிகமும் ஆப்திகமும் சேர்ந்து விட்டால் ஆப்திகத்தை மறுநாள் பண்ண வேண்டியது. தீட்டினால் நின்றுபோன மாஸிகத்தை தீட்டுப்போன தினத்திலோ, மேல் மாஸிகத்தோடு சேர்த்தோ பண்ண வேண்டியது. அதிக மாஸிகம் வந்தால் மாதா பிதா விஷயத்தில் அதிகத்தையும் பண்ண வேணும். முதலில் வருவது க்ஷயமான மாஸிகம், மாஸக் கடைசீயில் வருவது அதிக மாஸிகம். மாதம் முதலில் இறந்தவனுக்கு அதே மாஸக் கடைசியில் ம்ருத திதி வந்ததானால் ப்ரதம மாஸத்தில் அதிக மாஸிகம் கூடா தாகையால் த்விதீயாதிகமென்று பண்ணிவிட்டு, அடுத்த மாஸத்தில் வரும் திதியை த்விதீய மாஸிகமென்று பண்ணுகிறது.

ஸபிண்டீகரணத்திற்குமுன் பண்ணும் மாஸிகங்களை ஏகோத்திஷ்டமாகவும், பின் பண்ணும் மாஸிகங்களை ச்ராத்தம்போல் பார்வணமாகவும் பண்ண வேண்டியது.

ஸபிண்டீகரணத்திற்கு முன் ஷோடச சிராத்தங்களுக்கு ஸங்கல்பம் பண்ணுகிறபோதே அந்த வருஷாந்த திதிகளைப் பார்த்து மாஸிக ஊன மாஸிகங்களின் வரிசை க்ரமப்படி ஸங்கல்பம் பண்ணிவிட வேண்டும். தெரிந்து கொள்ள முடியாமற் போனால் பாதகமில்லை. ஸபிண்டீகரணத்திற்கு முன் ஏகோத்திஷ்டமாகப் பண்ண மாஸிகத்தைத் தவிர்த்து மற்ற மாஸிகங்களையே ஷோடசத்தில் சேர்க்கவேண்டியது.

மாதா பித்ருக்களின் ஆப்திகம் வரையில் இதரர்களுக்கு மாஸிகாதிகள் பண்ணக்கூடாதென்று நிஷேதமிருப்பதாலும், அதற்குமேல் பண்ணுவதில் நிஷேதமில்லாமையாலும், கீழே நின்றுபோன மாஸிகங்களை மாதா பிதாக்கள் ஆப்திகத்திற்குப் பிறகு இதராளுடைய ஆப்திகத்திற்கு நடுவில் அவகாசமிருந்தால் நடுவில் வரும் திதிகளில் கீழே விட்டுப்போன மாஸிகங்களையும் சேர்த்து ஸபிண்டீகரணம் 'வரையில் ஏகோத்திஷ்ட விதியாய்ப் பண்ணிவிட்டு ஸபிண்டீ கரணத்திற்குப் பிறகு வர்ஷாப்திகம் வரையில் பார்வண விதியாகப் பண்ணவேணும். இத்ரர்கள் ஆப்திகத்திற்கு அவகாசமிராமற்போனால், மாதா பித்ரு ஆப்திகத்திற்குப் பிறகு எல்லா மாஸிகங்களையும் சேர்த்து ஒரே நாளில் பண்ணிவிட்டு மறுநாளில் ஸபிண்டீ கரணத்தைப் பண்ணிவிடலாம். வர்ஷாந்தத்தில் பண்ணுகிற ஸபிண்டீகரணத்தை ஆப்திகத்திற்கு முதல் நாள் நாள் பார்க்காமல் பண்ணிவிடலாம்; இல்லாவிடில் ஆப்திகத்தையே ஸபிண்டீகரணமாகவும் பண்ணிவிடலாம். இவைகளில் அதீதமான ஊன மாஸிகங்களைப் பண்ணவேண்டுவதில்லை.

33. சிராத்தம்

ஒவ்வொருவருக்கும் அவரவர் இறந்துபோன மாஸ, பக்ஷ, திதிகளில் ப்ரதிவர்ஷம் ச்ராத்தத்தைப் பண்ண வேண்டியது. ஒரு திதி இரண்டு நாளில் வ்யாபித்திருந்தால், அபரான்ன வ்யாப்தியுள்ள தினத்தில் பண்ண வேண்டியது. இரண்டு தினங்களிலும் அபரான்ன வ்யாப்தி இருந்தால், அபரான்ன வ்யாப்தி அதிகமுள்ள நாளில் பண்ணவேணும். இருதினங்களிலும் ஸமமாக இருந்தால் முன் தினத்தில் பண்ணவேண்டியது. இரண்டு தினங்களிலும் அபரான்ன வ்யாப்தி இல்லாவிட்டால் மறுதினம் குதப வ்யாப்தி இருக்குமாதலால் அன்று பண்ணவேண்டியது. (பகற் பொழுதானது ப்ராதக்காலம் ஸங்கவம், மத்யான்னம், அபரான்னம், ஸாயான்னம் என்று ஐந்து ஸமபாகமாக பிரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. அவற்றுள் மத்யான்ன காலம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு காந்தர்வ காலம், குதப காலம் ரௌஹிண காலமென்று வழங்கப்படுகிறது.) சிராத்த காலத்தில் க்ரஹண வேதையிருந்தால் மறுநாள் பண்ண வேண்டும். க்ரஹண வேதையாவது, சந்திர, சூரிய கிரஹணத்திற்குமுன் முறையே மூன்று ஜாமம், நான்கு ஜாமம் என்று கணக்கிடப்படுவது.

ஒரு மாஸத்தில் இரண்டு திதிகள் வந்தால் பின் திதியில் ச்ராத்தம் பண்ணவேணும். பின் திதி ஸங்க்ரமணத்தால் துஷ்டமானால் முன் திதியிலேயே பண்ண வேணும். இரண்டு திதிகளுக்கும் தோஷமிருந்தால் பிந்திய திதியில் பண்ணவேணும். இவைகளிலும் மத்யான்னத்திற்கு முன் ஸங்க்ரமணம் மேற்பட்டால் அன்றைக்கு தோஷமில்லை. அர்த்தராத்திரிக்கு மேல் ஸங்க்ரமணமானால் அன்றைக்கும் தோஷமில்லை. முந்தியானால் தோஷமுண்டு. இந்த ந்யாயம் கடக மகர ஸங்ர

மணத்திற்கும் பொருந்தும். ஒரு மாஸத்தில் ஒரே திதியானால் எந்த தோஷமிருந்தாலும் அதிலேயே ச்ராத்தம் பண்ணவேணும். ஒரு மாஸத்தில் திதியே இல்லாவிட்டால் முன் மாஸத்தில் சாந்த்ரமானப்படி சுத்தமாஸ திதியில் பண்ணவேண்டியது. சாந்த்ர மானப்படிக்கும் திதி இல்லாவிட்டால் மறு மாஸ திதியில் பண்ணவேண்டியது.

மாதா பிதாக்களின் ச்ராத்தங்கள் ஒரே திதியாயிருந் தாலும், திதி த்வயமாக ஒரே நாளில் வந்தாலும், ஆசௌசத்தால் நின்றுபோய் தீட்டுப்போகும் நாளில் சேர்ந்து வந்தாலும், ஒரே பாகத்தில் (தளிகையில்) பிதாவின் ச்ராத்தத்தை முன்பும் மாதாவின் ச்ராத்தத் தைப் பின்பும் பண்ணவேண்டியது. தகப்பன், ஸபத்நீ மாதா ஆகியவர்களின் ச்ராத்தம் முன் சொல்லிய காரணங்களால் ஒன்று சேர்ந்தால் பிதாவின் ச்ராத் தத்தை முன்பு செய்துவிட்டு பின்பு வேறு பாகத்தில் ஸபத்நீ மாதாவின் ச்ராத்தத்தைப் பண்ணவேண்டியது. அனேக ச்ராத்தங்கள் ஒன்று சேர்ந்தால் பிதா, மாதா, ஸபத்நீமாதா, ப்ராதா என்கிற வரிசையாய்ப் பண்ண வேண்டியது. மற்றவைகளை இறந்த வரிசையாய்ப் பண்ணவேண்டியது. ஆப்திகமும் மாஸிகமும் ஒன்று சேர்ந்தால் ஆப்திகத்தை முந்தியும், மாஸிகத்தைப் பிந்தியுமாக வெவ்வேறு பாகங்களில் பண்ண வேண்டியது. பார்வணமும் (மூன்று பேர்களை உத்தே சித்த ச்ராத்தம்) ஏகோத்திஷ்டமும் (ஒருவனை உத்தே சித்த சிராத்தமும்) ஒன்று சேர்ந்தால் பார்வணத்தை முந்தியும், ஏகோத்திஷ்டத்தைப் பிந்தியுமாக வெவ்வேறு பாகங்களில் பண்ணவேண்டியது.

மாதா, பிதாக்களின் ஸபிண்டீ கரணத்திற்கு முன் இதரர்களின் ச்ராத்தத்தைப் பண்ணக்கூடாது. அன்யர் களின் க்ரியையில் மாதா, பித்ரு ச்ராத்தம் வந்தால் ஏகோத்திஷ்டமான பிறகு மறுநாள் (12வது நாளில்)

மாதா பிதாக்கள் முதலியோரின் ச்ராத்தத்தைப் பண்ணி பதிமூன்ருவது நாளில் இதரர்களின் ஸபிண்டீ கரணத்தைப் பண்ண வேணும். மாதா பிதாக்களின் ஸபிண்டீ கரணம் காரண வசத்தால் தாமதித்தால் பன்னிரண்டாவது நாளில் இதரர்களின் ச்ராத்தத்தைப் பண்ணி விடலாம். ஒருவன் ஒரே நாளில் (ஏகாதசி, அமாவாஸ்யை, பக்ஷ சிராத்தங்கள் தவிர) மூன்று ச்ராத்தங்களைப் பண்ணக்கூடாது. பண்ணும்படி நேர்ந்தால் இரண்டு ச்ராத்தங்களைத்தான் பண்ணி மற்றதை ஸஹோதரனுல் பண்ணுவிக்க வேண்டியது. ஸஹோதரன் இல்லாவிட்டால் தானே மறுநாளில் பண்ண வேண்டியது. ஒரே நாளில் ஒரே பித்ருக்களை உத்தேசித்து இரண்டு ச்ராத்தங்களைப் பண்ணக்கூடாது. நைமித்திகங்களானுல் பண்ணலாம். இதராளுடைய க்ரியை பண்ணும்பொழுது அந்த ஆசௌச மத்யத்தில் ச்ராத்தம் தீட்டினுல் நின்று போனுல் தீட்டுப்போகும் தினத்தில் பண்ண வேண்டியது. வேறு காரணத்தினுலாவது மறதியினுலாவது விட்டுப்போனுல் க்ருஷ்ண பக்ஷ ஏகாதசியிலாவது அமாவாஸையிலாவது க்ருச்ரம் பண்ணி ச்ர்ாத்தம் பண்ண வேண்டியது. ச்ராத்தத்திற்கு வரணம் பண்ணப்பட்டவர்களுக்கு அசௌசம் ஏற்பட்டால், வேறு மனுஷ்யர்களும் கிடைக்காமல் ச்ராத்தம் நின்று போனுல், கர்த்தா உபவாஸமிருந்து மறுநாள் ச்ராத்தத்தைப் பண்ண வேண்டியது. ஸ்த்ரீகள் பண்ணும் ச்ராத்தம் ரஜக்காலத்தில் தடைப்பட்டால் ஸ்நானம் செய்த மறுநாளில் அதாவது ஐந்தாவது தினத்தில் பண்ணப்படவேண்டும்.

மாதா பிதாக்கள் இறந்த ஸமீப காலத்தில் மாதாமஹன் முதலியவர்களிறந்து, அவர்களுக்கு க்ருத்யம் பண்ணும்படி நேர்ந்தால் அவர்களுக்கு ஏகோத்திஷ்டாந்தம் பண்ணி நிறுத்தி ஸபிண்டீ கரணத்தை மாதா பிதாக்களின் ஆப்திகத்திற்குப் பிறகு பண்ண வேண்டியது. ச்ராத்தங்கள் அனேகமாக முன்னூற்றைம்பத்

தைந்தாவது (355) நாளில் அல்லது மூன்னூற்றெண்பத்தைந்தாவது (385) வரும். மாதா பிதாக்களின் ஆப்திகம் முன்னூற்றெண்பத்தைந்தாவது நாளிலும், மாதாமஹாதிகளின் ஆப்திகம் முன்னூற்றைம்பத்தைந்தாவது நாளிலும் வந்து, மாதா பிதாக்களின் ஆப்திகத்திற்கு முன் மாதாமஹாதிகள் ஆப்திக காலம் வந்தாலும்கூட, மாதா பிதாக்களின் ஆப்திகத்திற்குப் பிறகுதான் மாதா மஹாதிகளுக்கு மாஸிகங்களைப் பண்ணி ஸபிண்டீகரணம் பண்ண வேணும். மறுபடியும் வேறு ஆப்திகம் கிடையாது. ஸபிண்டீகரணமே ஆப்திகமாகும்.

பிதா, மாதா, ஸபத்நீமாதா, பிதாமஹன், பிதாமஹீ, ப்ரபிதாமஹன், ப்ரபிதாமஹீ, பித்ருவ்யன், ஜனகபிதா, ஜனகமாதா, ஆகியவர்களுடைய ச்ராத்தத்தில் ஹோமமுண்டு. மற்றவர்கள் ச்ராத்தத்தில் ஹோமமில்லை. பிதா, மாதா, ஸபத்நீ மாதா, பிதாமஹன், பிதாமஹீ, ப்ரபிதாமஹன், ப்ரபிதாமஹீ, மாதாமஹன், மாதாமஹீ, பத்நீ, பித்ருவ்யன், ஜ்யேஷ்டப்ராதா, ஜனகபிதா, ஜனகமாதா, மாமனார், மாமியார், ஆகியவர்களுக்கு த்ரிபுருஷோத்தேச்யமாய், பண்ண வேண்டியது. மற்றவர்களுக்கு ஏகோத்தேச்யமாய் பண்ண வேண்டியது. ஸ்த்ரீகள் பண்ணும் ச்ராத்தங்களில், மாமனார், மாமியார், மாதா, பிதா, பர்த்தா, பர்த்ருப்ராதா, ஆகியவர்கள் விஷயத்தில் த்ரிபுருஷோத்தேச்யமாய் பண்ணவேணும். மற்றவர்களுக்கு ஏகோத்தேச்யமே.

ச்ராத்தத்தில் ஸபிண்ட, ஸமானோதகர்கள் நிமந்த்ரணத்திற்கு யோக்யர்களல்லர். மாதாமஹன் முதலான அன்ய கோத்ரிகளுக்குப் பண்ணும் ச்ராத்தத்தில் உத்தேச்யனுடைய ஞாதிகளை நிமந்த்ரணத்திற்கு வைப்பது வழக்கமில்லை. பிதா, புத்ரன், ஒரே வயிற்றில் பிறந்த ப்ராதாக்கள் ஆகியோர் ஒரே நாளில் நிமந்த்ரணம் இருக்கக்கூடாது. பத்நீ ரஜஸ்வலையாய் யிருந்தால் பர்த்தா நிமந்த்ரணமிருக்கக்கூடாது.

ச்ராத்தத்திற்கு முன் ஒரு மாஸம் அல்லது ஒரு பக்ஷம் வரையில், பரான்னம், வபனம் ஆகியவைகள் கூடாது. ஸங்கட விஷயத்தில் முன்மூன்று நாள்களிலாவது பரான்னத்தை விடவேண்டும். தன்னுடைய மித்ரன், ஆசார்யன், அம்மான், தங்கை, தமக்கை, மாமனர், மாமியார் ஆகியவர்களின் அன்னத்திற்கு பரான்னதோஷமில்லை.

நிமந்த்ரண ப்ராம்மணர்களுக்கு மூன்று வஸ்திரங்கள் அல்லது இரண்டு வஸ்திரங்கள் அல்லது ஒரு வஸ்த்ரமாவது தரவேண்டும். வஸ்த்ரமில்லாத பக்ஷத்தில் யக்ஞோபவீதமாவது கொடுக்க வேண்டும். உபவீதமும் கொடுக்காத ச்ராத்தம் நிஷ்பலமாகும். நிமந்த்ரண போஜனம் பண்ணுகிற ஸமயத்தில் போஜன பாத்ரத்திற்கு உச்சிஷ்டாத்யசுத்தி ஸ்பர்சம் நேர்ந்து நிமந்த்ரணப்ராம்மணர் தொடாமலிருந்தால் அந்த பாத்திரத்தை எடுத்து விட்டு இடத்தை சுத்தி பண்ணி, வேறு பாத்ரம் போட்டு, வேறு அன்னுதிகளை பரிவேஷணம் பண்ணி போஜனம் பண்ணி வைக்கலாம். கை அசுத்தமாய் போய் விட்டால் அங்கேயே கையை அலம்பி பிறகு போஜனம் பண்ணி வைக்கலாம். கையும், பாத்திரமும் அசுத்தியாகி விட்டால் கையை அலம்பி, வேறு பாத்ரம் போட்டு சாப்பிடச் செய்யலாம். இந்த விஷயங்களில் போக்தா சாப்பிட்ட பிறகு முன்னூறு காயத்ரியை ப்ராயச்சித்தமாக ஜபிக்க வேணும். நிமந்த்ரண ப்ராம்மணர்கள் போஜன காலத்தில் ஒருவரை ஒருவர் தொட்டுக் கொண்டால் அவர்கள் சாப்பிட்ட பிறகு நூற்று எட்டு காயத்ரீ ஜபிக்கவேணும்.

வீட்டின் வாசற்படிக்கு எதிரில் பாதபிரக்ஷாளனத்திற்காக பன்னிரண்டு அங்குலம் சதுரமாய் விச்வேதேவருக்கும். விஷ்ணுவுக்கும், மண்டலங்களும், அதற்குத் தென்புறம் பன்னிரண்டு அங்குலம் சக்ரமாய் பித்ருக்களுக்கு மண்டலமும் பண்ண வேண்டியது.

இரண்டுக்கும் நடுவில் ஆறு அங்குலம் இடைவெளி இருக்கவேணும். தேவ மண்டலத்தில் அக்ஷதையுடன் கூடிய தர்ப்பங்களை கிழக்கு நுனியாகவும், பித்ரு மண்டலத்தில் எள்ளுடன் கூடிய புக்னங்களைத் தெற்கு நுனியாகவும் போட வேண்டும். கர்த்தா நின்று கொண்டு காலலம்பக் கூடாது. ச்ராத்த ப்ராம் மணர்களின் காலை கணுக்காலுக்கு மேல் அலம்பக் கூடாது. உள்ளங்காலையும் அலம்பக்கூடாது. தர்ப்ப பவித்ர பாணியாய் காலலம்பவும், சந்தணம் பூசவும் கூடாது. காலலம்பிய ஜலங்கள் ஒன்று சேரக் கூடாது.

ஹோமத்தில் மிச்சமான நெய்யால் பாத்ராபிகாரம், அன்னுபிகாரம், ஆகியவைகளைப் பண்ணக் கூடாது. பருப்பு, பால், நெய், தயிர், தேன், கறியமுதுகள் ஆகிய வைகளை அன்னம் பறிமாறும் பாத்ரத்தில் பறிமாருமல் உப பாத்ரத்தில் பறிமாற வேண்டும். எப்பொழுதும் தாஞகவே ஆபோசன தீர்த்தத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது.

ச்ராத்தத்தில் பாகமெல்லாம் நெய்யிலேயே பண்ண வேண்டும். நல்லெண்ணெய் தவிர வேறு எண்ணெய் களை உபயோகிக்கக் கூடாது. ச்ராத்தத்தில் விதிக்கப் பட்ட யோக்யமான வஸ்துக்களாவன:—உளுந்து, கருப்பு எள், சம்பா நெல், கோதுமை, பயிறு, கடுகு, மூன்றுவித கருப்பில்லாத பாகல், பில்வம், நெல்லி, திராக்ஷை, இரண்டுவித பலா, மா, மாதுளை, கடுக்காய், குங்குமப்பூ, கருவேப்பிலை, வாழை (அநேக விதம்) ஐந்து விதமான இலந்தை, தேங்காய், திப்பிலி, மிளகு, குட்டைப் புடலங் காய், முள் கத்திரி, சுக்கு, தேன், நெய், சர்க்கரை, பச்சை கற்பூரம், வெல்லம், கடலுப்பு, வெள்ளரி, பசுவின் பால், எருமைப்பால் (மத்யமம்) ஜீரகம், சிவப்புக் கொடியுள்ள கூச்மாண்டம், சேப்பங் கிழங்கு, ஏலம், வெள்ளை புஷ் பங்கள், தாமரை, ஜாதி புஷ்பம், செண்பகம், மல்லிகை, துளசீ, தாழம்பூ, மரு ஆகியவை.

நிஷேதிக்கப்பட்ட, ச்ராத்த யோக்ய மல்லாத வஸ்துக்களாவன :—வர்கு, துவரை, காராமணி, கொள்ளு, கடலே, கருப்புப் பாகல், முருங்கை, பூஷணி, சுரைக்காய், எலுமிச்சை, நீளப்புடல், விளா, காச்சு உப்பு, ஒற்றைக்குளம்புள்ள மிருகத்தின் பால், மிளகாய், மோர், மந்தாரை ஆகியவை.

விதி நிஷேதம் இரண்டிலும் சொல்லப்பட்டவைகளைச் சேர்த்தாலும் சேர்க்கலாம், அல்லது விட்டாலும் விடலாம். போஜன ப்ரகரணத்தில் நிஷித்தமான வஸ்துக்களை ச்ராத்தத்தில் சேர்க்கக் கூடாது. அவைகளாவன:— உள்ளி, செம்முருங்கை, வெங்காயம், சுரை, முள்ளங்கி, கத்திரிக்காய், கன்று போட்டு பத்து நாளாகாத பசு, எருமை ஆகியவைகளின் பால், ஆட்டுப் பால், நீர் சேம்பு, வால் நீண்ட கருப்பு நெல், நாய்க் கருடு, சிறுகும்மட்டி, தேத்தாங் கொட்டை, கோவை, தும்பைக் கீரை, அத்தி, நெய்க் கசண்டு பிண்ணுக்கு, நீர் கலக்காத மோர், அப்போது ஆடின எண்ணெய், கன்று செத்த பசுவின் பால், தானுக ஒழுகவிடும் பசுவின் பால் ஆகியவை.

ச்ராத்தத்தில் ப்ராம்மணர்கள் சாப்பிட்ட இலையை ஸ்வஸ்தி வாசனத்திற்கு முன் எடுத்துவிட வேண்டியது. பிண்டப்ரதானத்திற்குப் பிறகு ஸ்தலத்தை சுத்தி பண்ண வேண்டியது. ச்ராத்த ப்ராம்மணர்கள் போஜனம் பண்ண இலேகளை பூமியில் புதைக்க வேண்டுமே யொழிய வேறு விதமாகப் பண்ணக் கூடாது. பண்ணுல் ச்ராத்தம் நஷ்டமாகும். ச்ராத்த க்ருஹத்தில் சூத்ராதிகளுக்கு ஆஹாரம் பண்ணி வைக்கக்கூடாது.

34. ச்ராத்தாங்க தர்ப்பணம்

ஹோமத்துடன் பண்ணுகிற ச்ராத்தங்களுக்கெல்லாம் அங்கபூதமான தர்ப்பணமுண்டு. மாதா பிதாக்களின் ச்ராத்தத்திற்கு அங்கமான தர்பணத்தை மறுநாள் பண்ண வேண்டியது. இதர ச்ராத்தாங்கமான தர்ப் பணத்தை அன்றே பண்ண வேண்டியது. ஜீவபித்ருகன் பண்ணும் ச்ராத்தங்களில் தர்ப்பணம் கிடையாது. ஸபிண்டீகரணம், அனுமாஸிகம், நாந்தீ ச்ராத்தம், ப்ரதமாப்திகம், இவைகளுக்கு அங்கமாக தர்ப்பணம் கிடையாது. யாருக்கு ச்ரார்த்தம் பண்ணுகிருேமோ அந்த ஒரு வர்கத்திற்கு மட்டும் பரேஹனி தர்ப்பணம் பண்ணவேண்டும்.

பரேஹனி தர்ப்பணத்தை ஸ்நானம் பண்ணி, ஸந்த்யாவந்தனம் பண்ணி விட்டு, ஸ்ரேயோதயமான பிறகு பண்ண வேண்டியது. பிறகு ஔபாஸன ஹோமம்.

35. தர்ச ச்ராத்தம்

தர்சமும் ஸங்க்ரமணமும் ஒன்று சேர்ந்தால் ஸங்க்ர மணத்தை அனுஷ்டிக்க வேண்டியது. தர்சம், ஸங்க்ர மணம், அர்த்தோதயம் அல்லது மஹோதயம், ஆகிய வைகள் சேர்ந்தால் ஸங்க்ரமணத்தையும், அர்த்தோதயம் அல்லது மஹோதயத்தையும் அனுஷ்டிக்க வேண்டியது. தர்சம், ஸங்க்ரமணம், க்ரஹணம், இவைகள் சேர்ந்தால் ஸங்க்ரமணம். க்ரஹணம் ஆகியவைகளை அனுஷ்டிக்க வேண்டியது.

ப்ரத்யாப்திகத்தில் தர்சம் வந்தால், ப்ரத்யாப்திகம் பண்ண பிறகு தர்ச தர்ப்பணம் பண்ண வேண்டியது. ஸங்க்ரமணம் வந்தால் ஸங்க்ரமண தர்ப்பணம் பண்ண

பிறகு ப்ரத்யாப்திகம் பண்ண வேணும். ஸங்க்ரமண மஹாளய சேர்க்கையில் ஸங்க்ரமணத்தை முன்பும், மஹாளயத்தை பின்பும் பண்ண வேணும். ஒரே நாளில் ஆப்திகம், மாஸிகம், தர்ச தர்ப்பணம், மஹாளயம், ஆகியவைகளைப் பண்ண நேர்ந்தால், முதலில் ஆப்திகம், இரண்டாவது மாஸிகம், மூன்றுமது தர்சம், நான்காவது மஹாளயம் என்கிற க்ரமத்தில் பண்ண வேண்டும்.

பிதா இறந்து போன வருஷத்தில் தர்சாதிகளில் அன்ன ச்ராத்தங்களைப் பண்ணக் கூடாது. அஷ்டகான்வஷ்டகைகளை மட்டும் அன்ன சிரார்த்தமாகப் பண்ண லாம். ஸபிண்டீகரணத்திற்குப் பிறகு தில தர்ப்பணத்தை மட்டும் பண்ண வேண்டியது. அவிபக்தர்களான ப்ராதாக்கள் தர்சம் முதலிய ச்ராத்த தினங்களில் தனித் தனியே தர்ப்பணாதிகளைப் பண்ண வேணும். ஸபிண்டீ கரணம் முடிந்துவிட்டால் அமாவாஸ்யை ஸங்க்ரமணம் மஹாளயம் அஷ்டகான்வஷ்டகை போன்ற திலதர்ப்ப ணங்களைப் பண்ணவேண்டும்.

தர்சம், ஸங்க்ரமணம், யுகாதி, மன்வாதி, அஷ்டமீ, சதுர்தசீ, பூர்ணிமை, மஹாளய பக்ஷம், ஞாயிற்றுக் கிழமை (சிலர் அனுஷ்டானம்) ஆகியவைகளில் ராத்ரி யிலும், ஏகாதசியில் அஹோராத்ரமும், போஜனம் நிஷேதிக்கப் பட்டிருக்கிறது. மேற்படிகளில் உபவாஸ சக்தியில்லாதவனுக்கு தீர்த்தம் கிழங்கு நெய், பால், ஹவிஸ், மருந்து பழம் ஆகியவைகளை சாப்பிடுவதால், வ்ரத பங்கமேற்படாது. இதரர்கள் இஷ்டபூர்த்திக்காக ச்ராத்த போஜனம் (நிமந்த்ரணம்) பண்ணுலும் வ்ரத பங்கமில்லை.

36. மஹாளயம்

மஹாளயதர்ப்பணத்தை மஹாளய பக்ஷத்தில் பஞ்சமி முதல் அடுத்த பஞ்சமிக்குள் பிதா இறந்த திதியிலோ வ்யதீபாதத்திலோ கஜச்சாயையிலோ, மத்யாஷ்டமியிலோ, மஹாபரணியிலோ, த்வாதசியிலோ பண்ணலாம். மேலே கூறிய தினங்கள் தவிர இதர தினங்களில் பண்ணுவதானல், வெள்ளிக்கிழமை, தன்னுடையவும், தன் பத்நீ, ஜ்யேஷ்ட புத்ரன் ஆகியோருடையவும் ஜன்ம நக்ஷத்ரம், ஆகியவற்றில் பண்ணக் கூடாது. ஸன்யாஸியின் மஹாளயத்தை த்வாதசியிலேயே பண்ண வேணும். மற்ற திதிகளில் கூடாது. த்வாதசியிலோ அல்லது கன்யா மாஸத்திற்குள் வேறு திதியிலோ ஆசௌசாதிகளால் பண்ண முடியாமற் போனல் கன்யா மாஸத்திற்குள் வேறு திதியிலோ அல்லது துலா க்ருஷ்ண த்வாதசியிலோ பண்ண வேண்டும். சஸ்த்ரஹனனம் முதலியவற்ருல் துர்மரணமடைந்தவர்களுக்கே சதுர்தசியில் மஹாளயம் பண்ண வேணும். வேறு திதியில் பண்ணக் கூடாது. அஸன்யஸ்த மஹாளயத்தையும் மஹாளய பக்ஷத்திற்குள்ளோ அடுத்த பஞ்சமிக்குள்ளோ பண்ணமுடியா விட்டால் கன்யாமாஸத்தில் நிஷேதமற்ற காலத்திலோ அதுவும் முடியாவிடில் துலாமாஸ முடிவிற்குள்ளோ பண்ணவேண்டும்.

மாதா பிதாக்களின் ச்ராத்தம் வருகிற மாஸத்தில் ச்ரார்த்தத்திற்கு முன் மஹாளயமாவது, மஹாளய தர்ப்பணமாவது பண்ணக் கூடாது. மஹாளயத்தில் மாத்ரு பிதா மஹி ப்ரபிதா மஹிகளுக்குத் தனியே வரணமுண்டு. தாயார் ஜீவித்திருந்தால் பிதா மஹ்யாதிகளுக்கு வரணமில்லை. ஆனல் பிண்ட தர்ப்பணங்களுண்டு. ஸபத்நீ மாதா இறந்து போயிருந்தால் வரணமுண்டு. இரண்டு மாதாக்களும் இறந்து போயிருந்தால் ஸபத்நீ மாதாவுக்குத் தனியாய் வரணமுண்டு. மாதா

மஹாதிகளை ஸபத்நீகர்களாய் வரிக்கவேண்டும். மாதா மஹ்யாதிகளுக்குத் தனியாய் வரணம் பண்ணக் கூடாது. மஹாளய தர்பபணத்தில் இருவர்கங்களிலும் காருணிக பித்ருக்களுக்குத் தர்ப்பணம் பண்ணவேண்டும். அதற்கு வேறு மந்த்ரம் கிடையாது. மஹாளய ச்ராத்தத்தை அன்ன ரூபமாய் பண்ணுகிறவர்களும், பிரதிவர்ஷமும் அவ்விதமே பண்ணவேண்டுமென்ற நியமமில்லை. தேச கால சக்த்யனுஸாரமாய் மாற்றிப் பண்ணுவதால், தோஷ மில்லை. விதுரர்கள் மஹாளயத்தை அன்ன ரூபமாய்ப் பண்ண அதிகாரமுள்ளவர்களல்லர்.

பார்யை ரஜஸ்வலையா யிருந்தால் மஹாளய அமாவாஸ்யைக்குப் பிறகு பஞ்சமிவரை தர்பணத்திற்கு அவகாசமிருப்பதால் மஹாளய தர்ப்பணம் பண்ணுவ தில்லை. ஏதோ அஸந்தர்ப்பத்தால் அமாவாஸ்யை வரை தர்ப்பணம் பண்ணாமலிருந்து பஞ்சமிக்குள் பண்ணும் போது பார்யை ரஜஸ்வலையாயிருந்தாலும் அவகாசமிராத தால் தர்ப்பணத்தைப் பண்ணிவிடலாம் (துலாமாஸ முடிவுவரை காலமிருந்தாலும் பஞ்சமிக்குள் பண்ணுவது விசேஷம்.)

தான் மஹாளயம் பண்ணுவதற்கு முன் பிறருடைய மஹாளயத்தில் வரிக்கப்பட்டு புஜிக்கலாகாது.

37. பால கன்யா மரண விஷயம்

ஆணானாலும், பெண்ணானாலும், பிறந்து இருபத்தி மூன்றாவது மாதம் பூரணமாவதற்குள் மரணமடைந்தால் அவர்களுக்கு கனன ஸம்ஸ்காரம் பண்ண வேண்டியது. இருபத்தி நாலாவது மாஸம் முதல் எழுபத்திரண்டாவது மாஸம் முடியும் வரையிலானால் துஷாக்நியினால் ஏகர்ச்ச விதியாய் ("அஸ்மாத்வமதி ஜாதோஸி" என்கிற மந்த்ரத்தால்) தஹனம் பண்ண வேண்டியது.

இருபத்தி நான்காவது மாஸ ஆரம்பத்திற்கும், முப்பத்தி ஆருவது மாஸ முடிவிற்கும் நடுவில் மரணம் நேர்ந்தால் திலோதக பிண்டங்களுண்டு. முப்பத்தேழாவது மாஸத்திற்கும், உபநயனம் நடப்பதற்கும் நடுவில் மரித்தால் ஸஞ்சயனமும், திலோதக பிண்டங்களும், ஏகோத்திஷ்டமும், நாராயண பலியுமுண்டு. உபநயனம் பண்ண பிறகு பன்னிரண்டாவது வயதிற்குள் மரித்தால், தஹன, ஸஞ்சயன, பாஷாணஸ்தாபன வாஸோதக, பிண்ட, பலிப்ரதான, ஏகோத்திஷ்ட ஷோடசச்ராத்த' நவச்ராத்தங்கள் எல்லாம் மந்த்ரவத்தாயுண்டு. ஸபிண்டீகரணம் மட்டும் கிடையாது. நாராயணபலி மட்டுமே உண்டு. பன்னிரண்டு வயதிற்கு மேல் உபநயனமாகாத புருஷனுக்கும், விவாஹமாகாத பெண்ணுக்கும், ஸபிண்டீகரணந்தம் ஸர்வமும் அமந்த்ரகமாயுண்டு.

புருஷனானாலும், ஸ்த்ரீயானாலும் பன்னிரண்டு வயதிற்குள் விவாஹமாய் விட்டால் ஸபிண்டீகரணந்தம் ஸர்வமுமுண்டு. இரண்டு வயதிற்குட்பட்ட பெண் விவாஹமாகி மரித்தால் கனனம் பண்ணி உடனே எடுத்து ஸமந்த்ரகமாய் தஹனாதி ஸபிண்டீ கரணந்தம் எல்லாவற்றையும் பண்ண வேண்டியது.

38. ப்ராயச்சித்தாதிகள்

ஏகோத்திஷ்டத்தில் வரிக்கப்பட்டு போஜனம் செய்தால், முப்பதினாயிரம் காயத்ரீ ஜபிக்கவேண்டும். முதல் தரமாக இருந்தால் பாதி பண்ணுலும் போதுமென்பர் சிலர். இதற்கு பதிலாக மஹாநதி ஸ்நான, ஸமுத்ர ஸ்நானங்களுமுண்டென்று சொல்லுவார்கள். பத்தாயிரம் காயத்ரிக்கு பதிலாக ஆயிரம் திலஹோமமும் பண்ணலாம். ஒரு வருஷம் வரையில் நிமந்த்ரணம் கூடாது. ஒரு ப்ராஜாபத்ய கிருச்ரமும் ஆயிரம் தில

ஹோமமும் மஹாநதி ஸ்நானமும் ஸமுத்ர ஸ்நானமும் பத்தாயிரம் காயத்ரியும் பரஸ்பரம் ஸமமானவை.

ஸபிண்டீகரணத்தில் நிமித்த ஸ்தானத்தில் வரிக்கப் பட்டால் முதல் தரமானால் பத்தாயிரம் காயத்ரீ ஜபம் பண்ணவேணும். இரண்டாவது முறையானால் பன்னிரண்டாயிரம் காயத்ரீ ஜபிக்கவேண்டும். ஆறு மாஸம் வரையில் நிமந்த்ரணம் கூடாது. பித்ருஸ்தானத்திற்கு முதல் தரமானால் ஆறாயிரம் காயத்ரீ. இரண்டாவது முதல் ஒன்பதினாயிரம் காயத்ரீ ஜபிக்கவேணும். மூன்று மாஸம் வரையில் நிமந்த்ரணம் கூடாது. விச்வேதேவர் ஸ்தானத்திற்கு நாலாயிரம் காயத்ரீ ஜபிக்கவேண்டும். இரண்டு மாஸம் வரையில் நிமந்த்ரணம் கூடாது. விஷ்ணு ஸ்தானத்திற்கு மூவாயிரம் காயத்ரீ ஜபிக்க வேணும். நாற்பது நாட்கள் நிமந்த்ரணம் கூடாது. ஒரு நாளைக்கு ஆயிரம் காயத்ரிக்கு மேல் ஜபம் பண்ணக் கூடாது. கீழ்ச்சொன்ன பிராயச்சித்த ஜபங்கள் நிமந்த்ரணம் இருந்து ஏழு நாட்களுக்குப் பிறகு பண்ண வேண்டியவை. ஏகோத்திஷ்ட ஸபிண்டீகரணங்களில் நிமந்த்ரணம் இருந்தவர்கள் நிமந்த்ரணம் இருந்த நாளையும் சேர்த்து ஒருவாரம் முடியும்வரையில் ஆசௌசம் போல் ஸந்த்யாதிகளைச் செய்யவேணும். மற்ற வைதிக கார்யங்களைச் செய்யக் கூடாது.

ஊன மாஸிகத்தில் வரிக்கப்பட்டு புஜித்தால் ஆயிரம் காயத்ரீ ஜபிக்கவேணும். பதினைந்து நாட்கள் நிமந்த்ரணம் கூடாது. மாஸிகத்திற்கு அறுநூறு காயத்ரீ, ஒரு வாரம் நிமந்த்ரணம் கூடாது. ஆப்திகத்திற்கு முன்னூறு காயத்ரீ ஜபிக்கவேண்டும். மூன்று நாள் வரையில் நிமந்த்ரணம் கூடாது. ப்ரத்யாப்திகத்தில் நூற்றெட்டு காயத்ரீ ஜபிக்கவேணும். ஒரு நாள் வரை நிமந்த்ரணம் கூடாது.

39. அஷ்டகா, அன்வஷ்டகா

மாக மாஸத்தில் (தைமாத அமாவாஸ்யைக்குப் பிறகு வரும் மாசிமாத அமாவாஸ்யைக்கு முன் இருக்கும் மாஸத்தில்) கிருஷ்ண பக்ஷ அஷ்டமிதிதியில் அஷ்டகா ச்ரார்த்தமும் மறுநாள் எந்த திதியாயிருந்தாலும் அன்வஷ்டகா ச்ரார்த்தமும் பண்ணவேண்டும். அன்ன ச்ரார்த்தம் பண்ண முடியாதவர்கள் திலதர்ப்பணம் பண்ணலாம். அக்னியுடையவர்கள் இருநாட்களுக்கும் சேர்த்து அஷ்டமியன்று காலையில் தத்யஞ்ஜலி ஹோமம் பண்ணலாம். திலதர்ப்பணம் பண்ணும் விஷயத்தில் பரேஹனி தர்ப்பணம் தவிர மற்றவற்றில் பித்ருவர்க மாத்ருவர்க, ஜ்ஞாதாஜ்ஞாத பித்ரு எல்லாருக்கும் தர்ப்பணமுண்டு. அன்ன ச்ரார்த்தமாகப் பண்ணுவதானால் மட்டும் சில சிரார்த்தங்களில் வர்கநியமமுண்டு. ஸாமவேதிகளுக்கும் அஷ்டகான்வஷ்டகையுண்டு. ஸூத்ரங்கள் வேறுவேறானாலும் அஷ்டகான்வஷ்டகை தர்மசாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளதால் தர்மசாஸ்த்ரம் எல்லோருக்கும் பொதுவானதால் எல்லோரும் பண்ணவேண்டும்.

40. பிற்சேர்க்கை

ஒரு கிரியை ஸபிண்டீகரணம் முடிய பண்ணப்பட்டதும் கர்த்தாவுக்கு நாச மேற்பட்டால் அந்த கிரியையைத் தொடர்ந்து மற்றவர்கள் செய்யவேண்டியதில்லை. இது ஸாமான்ய ந்யாயம். ஆனால் மாதா பித்ரு கிரியையில் ஜ்யேஷ்டன் ஸபிண்டீகரணாந்தம் பண்ணி இறந்தாலும் கனிஷ்டன் தொடர்ந்து மாஸிக ஆப்திக ப்ரத்யாப்திகங்களை உயிருள்ளவரை பண்ணவேண்டும். இவ்வாறே ஆசார்யனது கைங்கர்யமும் ஸபிண்டீகரணாந்தம் முடிந்தபிறகு கர்த்தா இறந்தால் சிஷ்யன் தொடர்ந்து பண்ணவேண்டும். பர்த்தா விஷயத்தில் புத்ரனால் ஸபிண்டீகரணாந்தம் பண்ணப்பட்ட பிறகு

புத்திரன் இறந்தால் பத்னீ தொடர்ந்து மாஸிக ஆப்திக ப்ரத்யாப்திகங்களைச் செய்யவேண்டும். பத்து நாட்களுக் கிடையில் கர்த்தா இறந்தாலும் பத்னி அன்னியனைக் கொண்டு உதகதானுதிகளையும் செய்யவேணும்.

பார்யைக்கு, பர்த்தா ஆசாரியன் என்றும் தேவதை என்றும் சாஸ்த்ரங்களிலும் ஸ்ரீமத் ராமாயணத்திலும் சொல்லப்பட்டிருப்பதால் ஸபிண்டீகரணுந்தம் பர்த் ருக்ரியை முடிந்திருந்தாலும் தொடர்ந்து பண்ண வேண்டும். புத்ரன் ஸபிண்டீகரணுந்தம் மாத்ரு கிரியை யைப் பண்ணி விட்டு இறந்தால் பர்த்தா அந்த கிரியை யைத் தொடர்வது வழக்கமில்லை.

புத்ரர்கள் தங்களுக்குள் சொத்தை விபாகம் செய்து கொள்ளாமலிருந்தால் ப்ரத்யாப்திகங்களை ஜேஷ்டனே செய்தால் போதும். கனிஷ்டன் சிரார்த்தத்தின் போது உடன் இருக்க வேண்டும். ஒரே ஊரில் புத்;ர்கள் தனித் தனியாக தளிகை பண்ணி சாப்பிட்டுக் கொண்டிருந் தால்தான் தனித்தனியாக மாத்ரு பித்ரு சிராத்தங்களைப் பண்ண வேண்டும்.

மாஸிக, ப்ரத்யாப்திகங்களில் நிமந்த்ரணமிருந்த வனுக்கு அன்று அசுத்தியுண்டு. ஸ்நாநம் பண்ணினு லும் திருவாராதனுதிகளைப் பண்ணக்கூடாது. ஸ்ரீ ஜயந்தி யன்று நிமந்த்ரணமிருந்து அன்று ராத்ரி ஜயந்தீ ஆரா தனம் பண்ண வேறு மனுஷ்யாளிராவிட்டால் ஸாளக் ராமாராதனமானுல் கதஞ்சித் ஸ்நாநம் பண்ணி ஆரா தனம் பண்ணலாம். இது இரண்டாவது பக்ஷம்தான்.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சாகையிலேயே வைச்வதேவோபதேசம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

ஆசௌசத்திற்குத் தலைமுறைகளைக் கணக்கிடும் போது யாருடைய பிறப்புக்கும் இறப்புக்கும் ஆசௌசம் அனுஷ்டிக்கிறேமோ அவர்கள் முதல் கணக்கிட வேண்டும்.
